
விலை ரூபா: 15.00

பொதுசன நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5906/222 8812

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 26 ஞாயிற்றுக்கிழமை (08.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 051

## யுத்தத்தை நிறுத்தியே ஆக வேண்டும்

# வன்னி மக்களைக் காப்பாற்ற ஐ.நா.-இந்தியா கூட்டு முயற்சி

## பான் கீ மூன் - முகர்ஜி சந்திப்பில் முடிவு

(புதுடில்லி)

வன்னியில் மிகச்சிறிய பிரதேசமொன்றுக்குள் கடும் மோதல்களுக்குள் சிக்கியுள்ள பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பும் இந்தியாவும் கூட்டு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## 'மிக்' விமானத் தாக்குதலில் பொன்னம்பலம் மருத்துவமனை தகர்ந்தது

### 61 பேர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை மீது 'மிக்' ரக வானூர்திகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் அங்கு சிகிச்சை பெற்று வந்த 61 பேர் பலியானதுடன் வன்னி எங்கும் நேற்றும் நேற்று முன்தினமும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் மட்டும் 126 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 238 பேர் காயமடைந்துள்ளனர். புதுக்குடியிருப்பில் உள்ள மருத்துவர் (14 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

புதுக்குடியிருப்புப் பகுதியில் பாதுகாப்பு படை நடவடிக்கையை மேற்கொண்டுள்ள படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நேற்று 6 தடவைகள் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதுக்குடி (14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் உச்சமடையும் மோதல் பேரவலத்தில் பொதுமக்கள்

### அபாய ஒலி எழுப்புகிறது ச.செ.சங்கம்

(கொழும்பு)

வன்னியில் தொடர்ந்துவரும் மோதல்களால் அங்குள்ள மக்களின் நிலைமை மேலும் மோசமடைந்து வருவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

சிறிய நிலப்பரப்புக்களில் அடைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்புத் தேடி மாறி மாறி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய நோயாளர்கள் முல்லைத்தீவு புதுமுட்டளம் பகுதியிலுள்ள சனசமூக நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் சரசி (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் அவலம் கண்டு தமிழகத்தில் கொதிக்கும் உறவுகள்

### நேற்றும் ஒருவர் தீக்குளிப்பு

(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும். ஈழத்தமிழரைக் காப்பாற்ற வேண்டும் எனக் கோரி தமிழகக் காங்கிரஸ் கட்சியின் கிளைச் செயலாளர் ரவிச்சந்திரன் தீக்குளித்து மரணமானார். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

நாகபட்டினம் மாவட்டம் சீர்காழி பிடாரி தெருவைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன் (வயது 45) இவர் சீர்காழி 17-வது வார்டு காங்கிரஸ் கிளைச் செயலாளராக பதவி வகித்தார்.

வழக்கம்போல் (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இரண்டு முகாம்கள் விசுவமடுவில் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

முல்லைத்தீவு விசுவமடு பகுதியிலுள்ள புலிகளின் இரண்டு முகாம்களை படையினர் கைப் பற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

விசுவமடுப் பகுதியில் புலிகளின் முகாமிலிருந்து 6 வீடுகள், பக்கோ இயந்திரம், ரக்டர்-ஹப் வாகனம் மற்றும் பீரங்கி ஒன்றின் பாகங்கள் உட்பட ஆயுதங்கள் சிலவற்றையும் படையினர் கைப்பற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் புலிகளின் ஆடைத்தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும் இராணுவத்தினர் கண்டு (14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் உணவுப் பொருளுக்கு தட்டுப்பாடு- உலக உணவுத்திட்டம்

(கொழும்பு)

மோதல்கள் நடைபெறும் இலங்கையின் வடக்குப் பகுதியில் உணவுப் பற்றாக்குறை நிலவுவதாக அங்கு உணவுப் பொருள்களை விநியோகித்துவரும் ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியான இடம்பெயர்வு மற்றும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் தற்பொழுது வன்னியிலுள்ள அனைத்து மக்களும் உணவுப் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்துள்ளனர் என உலக உணவுத் திட்டத்தின் பேச்சாளர் (14 ஆம் பக்கம் பார்க்க)

## அரச கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து மேலும் 5ஆயிரம் பேர் வவு. வருகை

(கொழும்பு)

அரச கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து மேலும் 5 ஆயிரம் பேர் நேற்று கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, விசுவமடு உட்பட சில பகுதிகளிலிருந்து இந்த மக்கள் வருகை தந்ததாக அவர் குறிப்பிட்டார்.

விசுவமடு, தர்மபுரம், குப்பிளான் குளம் ஆகிய பகுதிகளில் இந்த மக்கள் படையினரிடம் தஞ்சமடைந்துள்ளனர்.

இதனிடையே (14 ஆம் பக்கம் பார்க்க)




இணுவில் கந்தசுவாமி கோயில்
இன்றைய தினம் திருமஞ்சத்தில் திருவீதியுலா வரும் இணுவையூர் ஆறுமுகப் பெருமான்
திருவருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்
கூட்டுறவுநகர் விற்பனை நிலையம்
கிராமிய வங்கி சேவை
திருநெல்வேலி
என்றும் கூட்டுறவில்
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்
தொலைத்தொடர்பு சேவை
போக்குவரத்துச் சேவை



(2238)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பழிவாங்கும் நேரம் இதுவல்ல கருணாநிதிக்கு புலிகள் கடிதம் எழுதுவர்

## ஜூனியர் விகடன் தகவல்

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கடந்த மூன்றாம் திகதி நடந்த தி.மு.கவின் செயற்குழுக் கூட்டத்தில் பேசிய விடயங்கள் தொடர்பில், விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் கருத்தை அறிந்து ஜூனியர் விகடன் எழுதிய கட்டுரை இங்கு அப்படியே தரப்படுகிறது.






ஈழத்தமிழர்கள் பிரச்சினைக்காக தி.மு.க. செயற்குழு கடந்த மூன்றாம் திகதி கூட்டபட்ட போது, மத்திய அரசின் உச்சியைப் பிடித்து உலுக்கும்படியான முடிபை எடுப்பார்கள் என மொத்தத் தமிழகமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், வழக்கம் போலவே புலிகளின் சகோதர யுத்தத்தைக் குத்திக்காட்டிய கையோடு, இலங்கைத் தமிழர்களுக்கு என்றும் தன் ஆதரவு உண்டு என்று காட்டுவதற்காக போராட்டங்களை அறிவித்திருக்கிறார் முதல்வர் கருணாநிதி.

அதிலும் புலிகள் அமைப்பின் தலைவரான பிரபாகரனை 'சர்வாதிகாரி' என்றும் சகோதர யுத்தம் நடத்துபவராகவும், அமிர்தலிங்கம் கொலைக்குக் காரணமானவராகவும் குறிப்பிட்டு கருணாநிதி பேசியிருப்பது விடுதலைப் புலிகள் தரப்பை அதிரவைத்துள்ளது. இதற்கு பதிலடியாக, புலிகளும் தங்கள் தரப்பு வாதங்களை எடுத்து வைக்கத் தயாராகி விட்டார்களாம்.

இது குறித்து புலிகள் தரப்பிடம் பேசியபோது.

மூதறிஞர் கலைஞரைப் பற்றி தலைவர் (பிரபாகரன்) இது நாள் வரை எந்த விதக் கருத்தும் சொன்னதில்லை. ஆனால் கலைஞர் சமீபத்தில் போர் பற்றி கருத்துக் கூறும் போதெல்லாம். 'சகோதர யுத்தம்' பற்றி தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறார். ஆரம்பத்தில், எங்கள் இயக்கத்தின் மீதான அக்கறையால் தான் கலைஞர் இப்படிப் பேசுகிறார் என நினைத்தோம்.

ஆனால் சிங்கள இராணுவத்துக்கான போர் உக்கிரமாகி அப்பாவித் தமிழர்கள் கொன்றழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சூழலிலும், எங்கள் இயக்கத்தைப் பற்றிய பழங்கதைகளைச்சொல்லி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார் கலைஞர்.

எங்களின் வசமிருந்த அனைத்துப் பகுதிகளையும் இழந்துவிட்டாலும் சிங்கள இராணுவத்தை எதிர்க்கும் உறுதியை இது நாள் வரை நாங்கள் இழக்கவில்லை. கலைஞரைப் போன்ற தமிழினத் தலைவர்கள் ,எங்கள் போராட்டங்களுக்கு ஒன்றுபட்டுக் கைகொடுக்க வேண்டிய நேரமிது. செத்து மடியும் தமிழர்களைக் காப்பாற்றத் தமிழினத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து சிங்கள அரசின் செவிகளில் எச்சரிக்கை மணியடித்து அறைய வேண்டும். இதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஆனால் எங்கள் அமைப்பைப் பற்றியும் தலைவரைப் பற்றியும் பலவீனப்படுத்தும் விதமான விமர்சனங்களைக் கிளப்பி நோகடிக்கச் செய்வதை கொஞ்சமும் தாங்கிக் கொள்ள இயலவில்லை. எங்கள் தலைவர், முதல்வர் கலைஞருக்கு மனம் திறந்த கடிதம் ஒன்றை எழுதும் முடிபில் இருக்கிறார். யார் மூலமாகவாவது விரைவிலேயே அந்தக் கடிதம் கலைஞரின் கைகளைச் சென்றடையும்.

அப்போது எங்கள் தலைவர் மீதான மொத்த வருத்தங்களும் கலைஞரின் மனதிலிருந்து நீங்கிவிடும் என நம்புகிறோம் என்று கூறியவர்களிடம் "அந்தக் கடிதத்தின் சாரமென்ன?" என்று கேட்டோம்.

நீண்ட தயக்கத்துக்குப் பின், அந்தக் கடிதத்தில் பிரபாகரனின் எழுத்துகளாகப் பதிவாகக்கூடிய எண்ணங்களைப் பற்றிய தங்கள் ஊகங்களை வெளிப்படுத்தினார்கள் அது இதுதானாம்.

எங்களின் போராட்டத்துக்கு உங்களின் உறுதுணையும் பக்கபலமும் பெரிதாகக் கிடைக்கும் என்று நாங்கள் எண்ணி இருந்தோம். ஆனால் கூட்டணி குறித்த சங்கடங்களை உணர்ந்து உங்களுக்கு எவ்வித இக்கட்டுகளையும் ஏற்படுத்தி விடக்கூடாது என நினைத்தோம்.

இந்தியாவை ஆளும் காங்கிரஸ் அரசின் நிலைப்பாடு, ஒரு வருடத்துக்கு முன்பே எங்களுக்குத் தெரியும். சிங்கள அரசுடன் கைகோத்திருக்கும் அத்தனை சக்திகளைப் பற்றிய செய்திகளும் எங்கள் கவனத்துக்கு அப்போதே வந்தன. ஆனால் தமிழர்களுக்கோ புலிகளுக்கோ எதிராக உங்களை எந்த சக்தியும் திருப்பிவிட முடியாது என உறுதியாக நம்பினோம். இப்போதும் நம்புகிறோம்!

சில சமயங்களில் சகோதர யுத்தத்தை நாங்கள் விரும்பிச் செய்யவில்லை. சுதந்திர வேட்கையோடு போராடும் எங்கள் இயக்கத்தின் இக்கட்டுகளையும், சிலரால் நாங்கள் அனுபவித்த நெருக்கடிகளையும் வெளிப்படையாக விளக்கிச் சொல்லும் நிலையில் அந்த சூழ்நிலைகளில் நாங்கள் இல்லை. ஆனால் எங்களின் நெருக்கமானவர்கள் மூலமாக எங்கள் தரப்பு நியாயங்கள் உங்களின் செவிகளை எட்டியிருக்கும் என்றே நம்பினோம்.

என்ன காரணத்தாலோ தெரியவில்லை. எங்களைச் சிறுமைப்படுத்தும் விதமாக செயற்குழுவில் பேசி இருக்கிறீர்கள். வன்னிக் காடுகளுக்குள் வாழும் தமிழர்களுக்காகக் கடுகளவும் உறக்கமின்றிப் போராடிக் கொண்டிருக்கும் எங்களை உங்கள் பேச்சு எந்தளவுக்கு வருத்தி இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்.

கடந்த பத்தாண்டு கால இயக்க நிகழ்வுகளில் சகோதர யுத்தங்கள் ஏதேனும் நடந்திருக்கிறதா? கருணா எங்களுக்கு எதிராக மாறி, சிங்கள அரசின் செல்லப்பிள்ளையாக உருவெடுக்கப்போகிறார் என்று எங்கள் உளவுப்பிரிவு முன்கூட்டியே சொன்னது. நிதானமாக அவரை விசாரிக்கலாம் என்று நினைத்தோம். அந்தப் பொறுமைக்கான பலனைத்தான் இப்போது அனுபவிக்கிறோம்.

சிங்கள இராணுவம் காட்டுமிராண்டித்தமான போர்த் தாக்குதல்கள் நடத்திக்கொண்டிருக்கும் சூழலிலும், நியாயமான போர் மரபுகளையே எங்கள் தரப்பில் நாங்கள் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அப்பாவி சிங்கள மக்கள் மீது இன்றளவிலும் தாக்குதல் எதையும் நாங்கள் நடத்தவில்லை. உயிருடன் எங்களிடம் பிடிபட்ட சிங்கள வீரர்களை எல்லாம் கௌரவமாக ஒப்படைத்திருக்கிறோம். இறந்த வீரர்களை செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக ஒப்படைத்து வருகிறோம்.

தமிழ் மக்களை எங்களின் கேடயமாக நாங்கள் பயன்படுத்துவதாக சிலர் பரப்பி விட்ட பொய்களுக்கு, செஞ்சிலுவை சங்கத்தினரே தக்க பதிலைச் சொல்லி விட்டார்கள். இப்போதும் கெரில்லா போர் முறைகளைப் பின்பற்றுகிற எண்ணமின்றி, இராணுவக் கட்டமைப்புடன் போராடி வருகிறோம். இதனால்தான், உலக நாடுகளின் கவனம் எங்கள் போராட்டத்தின் பக்கம் திரும்பி இருக்கிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, நோர்வே மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் 'சிங்கள அரசும் புலிகளும் ஆயுதங்களை வைத்து விட்டு அரசியல் ரீதியாகப் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்!' என்று கண்டித்தும்கூட, 'கிளஸ்டர்' மற்றும் 'பொஸ்பரஸ்' குண்டுகளை எங்கள் இன மக்கள் மீது ஈவிரக்கமின்றி பொழிந்து கொண்டிருக்கிறது சிங்கள இராணுவம்.

போர் மரபுகளை காலில் போட்டு மிதிக்கும் சிங்கள அரசின் இன அழிப்பு வெறியும் இப்போது மெல்ல உலகுக்குத் தெரிய வந்திருக்கிறது. எங்களின் சுதந்திரப்போர் நல்லதொரு தீர்வைக் கொடுக்க விருக்கும் வேளையில், எங்கள் மீதான வருத்தங்களை மறந்து, எங்கள் தரப்பு நியாயங்களை ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

எத்தகைய நெருக்கடிகளையும் இக்கட்டுகளையும் எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருக்கும் எங்களுக்குக் கைகொடுக்கும் மொத்தத் தமிழ் சமூகத்துக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த வாதங்கள் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில் கடிதம் நீளுமென்று கூறப்படுகிறது. இந்த விபரங்களை நம்மிடம் பகிர்ந்து கொள்வோர், "இது கலைஞரின் மனத்தை முழுமையாக மாற்றும் என்று நம்புகிறோம். எங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் தமிழகத் தலைவர்களின் மூலமாகத்தான் கலைஞரிடம் அந்தக் கடிதத்தை சேர்க்கப் போகிறோம்". என்றும் சொன்னார்கள்.

இவ்வாறு ஜூனியர் விகடனில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டிற்கு வந்த 455 மாணவர்கள் படிக்க விசேட ஏற்பாடு

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டில் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் 455 மாணவர்களுக்குத் தற்காலிக பாடசாலைகள் நடத்தப் படவுள்ளன.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் யாழ்ப்பாணத்தின் கொடிகாமம், மிருசுவில், திருநகர் மற்றும் கோப்பாய் ஆகிய பகுதிகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தங்கவைக்கப்பட்டிருப்பவர்களில் ஆண்டு 1 முதல் ஆண்டு 13 வரை கல்வி கற்கும் 455 மாணவர்கள் உள்ளடங்குகின்றனர்.

இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்காக அவர்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் கல்வி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு பாடசாலையின் பின்புறத்தில் விசேட வகுப்பறை அமைக்கப்பட்டு அங்கு கல்வி வழங்கப்படவிருப்பதுடன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மாணவர்கள் கோப்பாய் மகாவித்தியாலயத்திலும் திருநகரில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு திருநகர் சென் சார்ள்ஸ் மகாவித்தியாலயத்திலும் கல்வி வழங்கப்படவுள்ளது.

நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மாணவர்கள் அனைவருக்கும் சீருடைகள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு முன்வந்திருக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்கள் மாணவர்கள் கல்வி கற்கவிருக்கும் பாடசாலைகளில் மேலதிக மலசலகூட வசதிகளைச் செய்துகொடுக்கவுள்ளன.

இதேவேளை இடம்பெயர்ந்து மிருசுவிலில் தங்கியிருப்பவர்களில் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 3 ஆசிரியர்களும், கிளிநொச்சியைச் சேர்ந்த 2 ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களையும் அருகிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்பிக்குமாறு பணிப்புரை வழங்கப் பட்டுள்ளது.

(ந-5)

# பாடசாலை அதிபர்களுக்கான 'ஊடகக் கல்வி' கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் 'ஊடகக் கல்வி அறிவும் பாடசாலை மாணவர்களும்' என்ற பொருளில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. செல்வராஜா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி.வி. இராதாகிருஸ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜா தொடக்கவுரையை ஆற்றவுள்ளார்.

கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஊடகவியலாளர் க.வேல்தஞ்சன், யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்துவர்.

இந்தக் கருத்தரங்கு கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெறவிருந்து பிற்போடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

# எந்திரவியலுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் எந்திரவியல் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிக்கான விண்ணப்ப படிவத்தினை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிக்கு முன்பாக திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ந)

## ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் மாபெரும் கண்காட்சியும் விற்பனையும் நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியைப் பாடசாலை அதிபர் திருமதி. க. பொன்னம்பலம் திறந்து வைக்கவுள்ளார். (ஓ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 200 | 240 |
| தக்காளி | 300 | 200 |
| அவரை | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 100 | 90 |
| கரட் | 80 | 50 |
| பூசணி | 80 | 60 |
| புடோல் | 80 | 60 |
| வாழைக்காய் | 160 | 140 |
| சின்ன வெங்காயம் | 50 | 60-40 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 |
| பாகற்காய் | 140 | 70 |
| வெண்டிக்காய் | 100 | 70 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 |
| பயிற்றங்காய் | 160 | 100-120 |
| லீக்ஸ் | 200 | 100 |
| போஞ்சி | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 10 |
| தேசிக்காய் | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 |

## பாடசாலை மாணவர்களுக்கான நாடக எழுத்துருவாக்கப் போட்டி

செயல்திறன் அரங்க இயக்கமும் கூத்தரங்கும் இணைந்து கூத்தரங்கம் நாடகம் அரங்கியலுக்குமான இதழின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாடக எழுத்துருவாக்கப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் பாடசாலை உயர் தர மாணவர்கள் பங்குபற்றலாம். புத்தாக்கப் படைப்பாக நாடக எழுத்துரு அமைத்தல் வேண்டும். இப்போட்டியில் முதலாவது பரிசாக ரூபா பத்தாயிரம், இரண்டாவது பரிசாக 7 ஆயிரத்து 500, மூன்றாவது பரிசாக ரூபா ஐயாயிரம் வழங்கப்படும். இதனை விட தகுதி காண் எழுத்துருக்கள் அனைத்திற்கும் சான்றிதழ்கள் வழங் கப்படும் பரிசு பெறும் எழுத்துருக்கள் கூத்தரங்கத்தில் இணைய மற்றும் மின் பதிப்புக்களிலும் வெளி யிடப்படும்.

இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 28 ஆம் திகதியாகும். இவை தொடர்பான விபரங்களை பாடசாலைகளிலும் அருளகம் ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள செயல் திறன் அரங்க இயக்க அலுவலகத்திலும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் : 0777286220, 0602216222.

## சுகாதார சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொதுச் சந்தையில் உள்ள மலசலகூடம் பொது மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ)

## அபிவிருத்தி உதவியாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு அபிவிருத்தி உதவியாளர்களுக்கான 1வது, 2வது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அலுவலர்களுக்கான 1வது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 8.30 - பி.ப 4.45 வரையும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 - நண்பகல் 12.00 மணி வரையும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடை பெறவுள்ளதாகவும், கே. நிகேதினி, என். சுமதி ஆகிய இரண்டு பரீட்சார்த்திகள் உட்பட அறிவிக்கப்பட்டவர்கள் இப் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ளனர் எனவும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பரீட்சார்த்திகள் 10 ஆம் திகதிக்கு முன் மாவட்ட செயலக நிர்வாக கிளையுடன் தொடர்பு கொண்டு தமது பிரசன்னத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக் கொள் கின்றார். (ஓ)

## வாரம் ஒரு தகவல்

## இரண்டு விவகாரங்கள்

"கடைசிவரைக்கும் கூடவே இருந்து நம்மைக் கஷ்டப் படுத்தும் விவகாரங்கள் இரண்டு"

"என்ன அது?"

"அன்பில்லாத மனைவி, ஆஸ்துமா"

"முதலில் சொன்னீங்களே அதுசரி! இரண்டாவது சொன்னீங்களே அதை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்"

"ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்தி விடலாம் என்றா சொல்கிறீர்கள்?"

"நான் ஒரு வைத்தியம் சொல்கிறேன். முயற்சி செய்து பார்க்கிறீர்களா?"

"சொல்லுங்கள்"

"ஒரு கிலோ வெங்காயத்தை சிறிது சிறிதாக நறுக்கி ஒரு மண்பானையில் போடுங்கள். அதில் 2 கிலோ சுத்தமான வினிகரையும் சேருங்கள். ஒரு துணியால் பானையைக் கெட்டியாக மூடி மண்ணால் பூசி மெழுகி விடுங்கள். இந்தப்பானையை பழைய பேப்பர் - துணி குவியலில் 40 நாள் புதைத்து வைத்து விடுங்கள். பின்னர் எடுத்து சுத்தமான துணியால் வடிகட்டுங்கள். இரண்டு பங்கு சீனி சேர்த்து ஒரு பசையாக ஆகும்வரை லேசான தீயில் சூடு படுத்துங்கள். பின்னர் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் அதை எடுத்துப் பத்திரப் படுத்துங்கள். அவ்வளவுதான்."

"அதன் பின் என்ன செய்ய வேண்டும்?"

"தினமும் காலையில் 10 கிராம் வீதம் சாப்பிட்டுக் கொண்டு வந்தால் ஒரு மாதத்தில் பலன் தெரியும். தொடர்ந்த இருமல், ஆஸ்துமா இரண்டுக்கும் இது நல்லது."

"ஆஸ்துமாவை விரட்டுவதற்கு மருந்து சொன்னீர்கள். அன்பில்லாத மனைவியை விரட்டுவதற்கு மருந்து சொல்லவில்லையே!"

"அதற்கு மருந்து சொல்லும் அளவுக்கு எனக்கு இப்பொழுது தகுதி இல்லை"

"ஏன்?"

"அவ, என்னை விரட்டியதால் தானே நான் இப்பொழுது உங்கள் வீட்டுக்கு ஓடிவந்திருக்கிறேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

08.02.2009
(தை 26, ஞாயிற்றுக்கிழமை)
சதுர்த்தசி முன்னிரவு 11.17 மணிவரை
பூசம் பின்னிரவு 3.36 மணிவரை
இராகுகாலம் 5.05- 6.35 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
தைப்பூசம்

| | |
|---|---|
| மேடம் | உறவினர் வருகை, சுபசெலவு, நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| இடபம் | சகோதரர் வழி நன்மை, பிரயாண அனுகூலம், சுவாரஸ்யம், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | காரிய தாமதம், பணவிரயம், வீண் விவாதம், கௌரவக்குறைவு. |
| கடகம் | முயற்சி கைகூடும், உறவினர் சந்திப்பு, தெய்வ சிந்தை, சயன சுகம். |
| சிங்கம் | சுபசெலவு, பிரயாணம், அமைதிக் குறைவு, காரியம் தாமதம். |
| கன்னி | எடுத்த காரியம் கைகூடும், கலந்துரையாடல், பொருள் சேர்க்கை, விருந்துபசாரம். |
| துலாம் | மகிழ்ச்சியான தகவல், முயற்சி கைகூடும், தேகநலன், போசன நன்மை. |
| விருச்சிகம் | தந்தை வழி உறவு, பிரயாண நன்மை, திடீர் நன்மை, புதிய திட்டமிடல். |
| தனுசு | வாகன பயம், காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, போசன சுகம். |
| மகரம் | உஷ்ணநிலை, களஸ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ தரிசனம். |
| கும்பம் | முயற்சி கைகூடும், உடல் நலம், மனமகிழ்ச்சி, போசன நன்மை. |
| மீனம் | குடும்பக் கவலை, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை, பூர்வ புண்ணிய கருமம். |

வளவன்

## மெய் வல்லுநர் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/ வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சு.திருகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை. எங்கரசு, சிறப்பு விருந்தினர்களாக யா/ வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை முன் னாள் அதிபர் மா.செல்வராசா, ஜே/167 வட்டு மேற்கு கிராம உத்தியோகத்தர் திருமதி. தேவ மனோகரி கலைச் செல்வன், மாதர் கிராம அபி விருத்திச் சங்க தலைவர் செல்வி கனகரத் தினம் முத்துமணி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## வேதாந்த மடத்தில் புதிய யோகாசன வகுப்பு

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுரு நாத பீடத்தில் (வேதாந்த மடம்) புதிய யோகசன வகுப்பு ஆரம்பமாகி திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் காலை 6.30 மணிக்கு நடைபெற்று வருகின்றது. யோகாசனம் பயில விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி இவ்வகுப்புகளில் கலந்து பயன் பெறுமாறு வேதாந்த மட பீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்யா சாகர சுவாமிகள் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## சான்றிதழ் வழங்கலும் கண்காட்சியும்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தின் முறைசாரா கல்விப் பிரிவினரால் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட மனை முகாமைத்துவத்தின் கற்கை நெறி யின் சான்றிதழ் வழங்கலும் கண்காட் சியும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஆ. சா. அரியகுமார் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா, சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையின் முகாமை சேவகர் குரு அருட்திரு. ந. அருள்நாதன், வடமராட்சி முறை சாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த. தபேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4-19)

## மஹா சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட கோவையம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தான மஹா சங்காபிஷேகம் (1008) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் தொடர்ந்து யாக பூஜைகள், சங்கு பூஜைகள், விஷேடதிரவிய அபிஷேகம், மகா பூர்ணாகுதி, சண்முக அர்ச்சனை, வேத தோத்திரம், திருமுறைப் பாராயணம் என்பன இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வின் சங்காபிஷேக பிரதம குருவாக சிவாச்சாரிய இளஞ்சுடர் சிவஸ்ரீ இரத்தின பூரணானந்தக் குருக்கள் கீதச் சந்திரக் குருக்களும், மங்கள வாத்தியம் சுதா குழுவினர், இசை ஞான கேசரி லோகநாதன் குழுவினர் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஓ-4)


## விரையுங்கள்

இளவல்களே!
உங்களின் பிரபஞ்சம்
இங்கு நீங்களே!
சிருஷ்டிகள்
வெளிச்சத்தை
வௌவால்களைப் போல தேடாமல்
தோல்வியின் கால்களுக்குள்
நசிந்து விடாமல்
அதை கல்லாக்கி
நேற்றைகளை அதிலே
சலவை செய்து
நாளைகளை நோக்கி
விரையுங்கள்
விடியும் வானம்
உங்கள் முடியைத் தொடும்.

எஸ். கவிநேசன் - கல்வளையூர்.

திரை விமர்சனம்

# நான் கடவுள்



வாழ இயலாத ஒருவருக்கு மரணம் வரம். அந்த வரம் கொடுக்கிற மனிதன் கடவுளாகிறான். இதுவே 'நான் கடவுள்'. இதுவரை தமிழ்சினிமாவில் இருந்து வந்த விதிக்கப்படாத விதிகளை சில்லு சில்லாக உடைத்து விட்டு நம்மை நிஜமான ஒரு உலகத்துக்கு எடுத்துச் செல்லும் வழக்கமான வேலையைச் செய்திருக்கிறார் பாலா.

நானே பிரம்மா, நானே ஈஸ்வரன், நானே கடவுள். மரணத்தைக் கொடுப்பவன் நானே. மறுபிறவி அளிப்பவனும் நானே என்று சொல்லி உறவுகளைத் துறந்து காசியில் சாமியாக மாறி இருக்கும் 'ருத்ரா' தான் ஆர்யா. மகனைப் பார்க்க ருத்ராவின் தந்தை காசிக்கு வருகிறார். இந்த உலகில் உனக்கு எல்லோரும் ஒரே மாதிரித் தான். உனக்கு உறவுகள் இருந்தால் நீ சாமியாக முடியாது. நீ போய் உன் உறவுகளை விட்டு விட்டு வா என்று ருத்ராவின் குருசாமி கட்டளையிட, அகோரி சன்னியாசியாக இருக்கும் ருத்ரா தன் குடும்பத்தைப் பார்க்க தென் தமிழ் நாட்டின் மலைக் கோயிலுக்கு வருகிறான். நீ என்னிடம் திரும்ப வரும் நேரம் உனக்கே தெரியும் என்றும் குருஜி சொல்லி அனுப்புகிறார்.

ருத்ராவின் தோற்றத்தைப் பார்த்து திகைத்துப் போகிறாள் தாய், தான் ஒரு கடவுள் என்பதை தன் தாய்க்கு புரிய வைக்க முடியாமல் ருத்ராவும், அதைப் புரிந்துகொள்ள முடியாமல் தாயும் இருக்க. சாப்பிட உணவு என்ன வேண்டும்? என்று தாய் கேட்க, கஞ்சா இருக்கா?



எனக் கேட்கிறான் ருத்ரா. மலைக் கோவிலில் கஞ்சா கிடைப்பதை அறிந்து அங்கேயே தங்கிவிட, சடை வளர்த்து ஊரை ஏமாற்றி கோவிலுக்குள் இருந்து வரும் போலிச் சாமியார்கள் ருத்ராவின் மந்திரங்களையும் தோற்றத்தையும் பார்த்து, இவன் உண்மையிலேயே சாமி தான் என எண்ணி, சாமிக்கு சிஷ்யராகிறார்கள். சாமியும் கஞ்சாவை மட்டும் உணவாய்க் கொண்டு தியானம் செய்து வருகிறார்.

உடல் ஊனமுற்றவர்களைக் கடத்தி வந்து கூட்டு சேர்த்து தொழில் செய்து வருகிறான் தண்டபாணி (வில்லன்). உடல் நன்றாக இருந்தால், அவர்களின் எலும்புகளை உடைத்து பிச்சைக்கு அனுப்புகிறான். தனக்கு கீழ் நான்கு பேரை வேலைக்கு வைத்து அவர்கள் ஒவ்வொருவரிடமும் கொஞ்சம் கொஞ்சம் ஆட்களைப் பிரித்துவிட்டு பொலிஸ் உதவியோடு பிச்சைத் தொழில் நடத்துகிறது தண்டபாணி கும்பல். வருகிற வசூலை எடைபோட்டுப் பார்த்தே கணக்கு போடுகிறார்கள். புதிதாகக் கடத்தி வருபவர்களுக்கு பிச்சை எடுப்பது எப்படி என்றும், கற்றுக் கொடுத்து கொடுமைகளை நடத்தி வருகிறார்கள்.

இந்தப் பிச்சைக் கும்பலில் வந்து சேர்கிறாள் பார்வைதெரியாத அம்சவள்ளி (பூஜா). ரயியில் பாட்டுப் பாடி பிச்சை எடுத்து வந்த அம்சவள்ளியை பாட்டு நல்லா பாடுறா என்று சொல்லி பொலிஸ் உதவியோடு இந்தக் கும்பலுக்கு கொண்டு வருகிறார்கள். கேரளாவில் இதே தொழில் செய்யும் ஒருவனுடன் தொடர்பு ஏற்பட. இந்த இருவரும் தேவைக்கு ஏற்ப ஆட்களை மாற்றிக் கொள்வதும் நடந்து வருகிறது. இப்படி இருக்க முற்றிலும் முகம் இல்லாத ஒரு மனிதன். அதாவது முகம் குழம்பிக் கூழாகிப் போயிருக்கிற ஒருவனுக்கு உடலுறவிற்கு ஒரு பெண் தேவைப்பட அம்சவள்ளி பத்து இலட்சத்திற்கு விலை பேசப்படுகிறாள். அம்சவள்ளி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அந்த ஊரின் மலைசாமியே சாமியாக இணைக்கும் ருத்ராவிடம் முறையிடுகிறாள். சாமி என்ன செய்கிறது என்பது தான் 'நான் கடவுள்' ஆர்யா படத்தின் அதிகக் காட்சிகளில் இல்லை என்றாலும், வந்து போகிற அனைத்து காட்சிகளிலும் சபாஷ் வாங்குகிறார்.

வசன உச்சரிப்பு, விழியசைவு, உடலசைவு, திரும்புதல், பார்த்தல், நடப்பது , ஓடுவது என எல்லா விதத்திலும் பக்கா பெர்ஃபெக்ஷன்.

காட்சிக்கு காட்சி ஒரு விஷயம் வைத்திருக்கிறார் பாலா. படத்தின் ஒரு ஷாட் கூட தேவையில்லாமல் இல்லை. எந்த ஒருகட்டத்திலும் ஹீரோவுக்கும் ஹீரோயினுக்கும் காதல் வராதது தமிழ் சினிமாவிற்கு புதுசு! இப்படி ஒரு படைப்பை இவ்வளவு சீக்கிரம் கொடுத்த பாலாவுக்கு இன்னொரு சபாஷ் !!

# சரத்குமார் நடிக்கும் '1977' படத்தில் ஹொலிவுட் பாணியில் உச்சக்கட்ட காட்சி




சரத்குமார் கதாநாயகனாக நடித்து, இம் மாதம் திரைக்கு வர இருக்கும் 1977, வித்தியாசமான கதை அமைப்பைக் கொண்ட படம். படத்தின் கதை 4 பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது.

முதல் பாகம் கிராமத்தில் நடைபெறுவது போலவும், இரண்டாம் பாகம் நகர்ப்புறத்தில் நடைபெறுவது போலவும் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்றாம் பாகம் மலேசியாவில் நடைபெறும். நான்காம் பாகம், படத்தின் உச்சக் கட்ட காட்சி.

ஹொலிவுட் படங்களைப் போல் படத்தின் உச்சக்கட்ட காட்சி, 30 நிமிடங்கள் வரும். படத்தில் சரத்குமார், மலேசிய தமிழராக வருகிறார். புதைந்து போன உண்மைகளைத் தேடி, அவர் மலேசியா வருவது போல் அவருடைய கதாபாத்திரம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

படத்தில், அவருக்கு ஜோடியாக நமீதா, பர்ஸானா ஆகிய இருவரும் நடித்திருக்கிறார்கள். தினேஷ்குமார் இயக்கியுள்ள இப்படத்திற்கு வித்யாசாகர் இசையமைத்துள்ளார்.ஆர்.எஸ்.கே.பிக்சர்ஸ் சார்பில் இந்தப் படம் தயாராகி இருக்கிறது.

# ரஜினியின் ஸ்பெஷல் உபசரிப்பு



பிங்க்பாந்தர் படத்தின் அறிமுக விழாவில் கலந்து கொள்வதற்கு முன் சென்னையில் நடந்த எந்திரன் படப்பிடிப்பில் கலந்து கொண்டார் ஐஸ்வர்யாராய்.

பெரு, வேலூர், கோவாப் படப்பிடிப்பை போலவே சென்னையிலும் பாதுகாப்பு வலயத்துக்குள் இராணுவக் கட்டுப்பாட்டுடன் நடந்தது ரஜினி, ஐஸ்வர்யாராய் சம்பந்தப்பட்ட காட்சிகளின் படப்பிடிப்பு.

திருமணக் காட்சி ஒன்றுக்காக சிட்டியில் உள்ள செல்வந்தர்களின் கார்கள் தருவிக்கப்பட்டன. இருபது இலட்சத்துக்கு அதிகமாக மதிப்புள்ள கார்கள் மட்டுமே படப்பிடிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. ரஜினி, ஐஸ்வர்யாராய் திருமணக் காட்சிக்காகத் தான் இந்தக் கார்கள் தருவிக்கப்பட்டன என்கிறார்கள். சென்னையிலும், புறநகரிலும் படப்பிடிப்பு நடந்தபோது இயக்குநர் ஷங்கருக்கும், ஐஸ்வர்யா ராய்க்கும் ரஜினி வீட்டிலிருந்துதான் சாப்பாடு சென்றிருக்கிறது. நண்பர் அமிதாப்பச்சனின் மருமகள் என்பதால் ஐஸை கொஞ்சம் ஸ்பெஷலாகவே கவனித்திருக்கிறார் ரஜனி. சூப்பர் ஸ்டாரின் இந்த விசால மனம் கண்டு வியந்து போனாராம் உலக அழகி.

# நயன்தாராவுக்கு தடை நீக்கம் ! தமிழில் நடிக்கலாம்



நயன்தாரா அட்வான்ஸ் தொகையை திருப்பிக் கொடுத்துவிட்டார். அதனால் அவருக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது. இனி அவரை தமிழில் ஒப்பந்தம் செய்யலாம் என்று தயாரிப்பாளர் சங்கம் அறிவித்துள்ளது.

நயனின் கால்ஷீட்டை பெற்றுவிட வேண்டும் என்று ஒரு கோடி சம்பளம் தருவதாக ஓகே வாங்கினார் இயக்குநர் லிங்குசாமி. பருத்திவீரன் கார்த்திக் உடன் பையா படத்தில் நடிப்பதாக நயன்தாரா ஒப்பந்தம் செய்யப்பட்டார். லிங்குசாமியின் சகோதரர் சுபாஸ் சந்திரபோஸ்தான் இப் படத்தின் தயாரிப்பாளர்.

நயன்தாராவுக்கு இப் படத்திற்காக அட்வான்சாக ரூ 15 இலட்சம் அளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. பின்னர் நயனிடம் சம்பளத்தை குறைத்துக்கொள்ளச் சொல்லி நயமாக பேசியிருக்கிறார் தயாரிப்பாளர் சுபாஸ். இதற்கு நயன்தாரா ஒப்புக்கொள்ளவில்லை.

வாங்கிய அட்வான்ஸை திருப்பித் தர வேண்டும் என்று சுபாஸ், தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் செய்தார். புகாரின் அடிப்படையில் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கமும் தென்னிந்திய நடிகர் சங்கமும் இணைந்து கூட்டுக் கலந்தாய்வு கூட்டத்தை நடத்தின. இந்தக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, நடிகை நயன்தாராவை தமிழ் திரைப்படங்களில் ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது . இந்நிலையில் நேற்று தயாரிப்பாளர்களுடனான பேச்சுவார்த்தையில் நயன் அட்வான்ஸ் தொகையை திருப்பிக்கொடுத்து விட்டார்.

இதனால் அவருக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.

# சிநேகாவின் தெலுங்குப் படம் தமிழில்



சிநேகா நடித்த 'மனசு பலிக்கே மவுனராகம்' என்ற தெலுங்கு படம், 'ஏன் இந்த மவுனம்' என்ற பெயரில் தமிழில் 'டப்' ஆகிறது.

அதிரடி சண்டைக் காட்சிகள் நிறைந்த காதல் கதை இது. சிநேகா ஜோடியாக விக்ரமாதித்யா நடித்திருக்கிறார்.

வாழ்க்கையை மிக எளிதாக எடுத்துக் கொண்டு வாழ்ந்து வரும் ஒரு இளைஞனின் வாழ்க்கையில், தென்றலாக நுழைகிறாள், ஒரு பெண். ஒரு கட்டத்தில் அவள் புயலாக மாற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இரண்டு பேரின் வாழ்க்கையிலும் நடைபெறும் உணர்ச்சிகரமான போராட்டமே இந்தப் படத்தின் கதை.

# இலங்கையில் தமிழர் 64

### இள மக்களும் தமிழ் மக்களும்

மொழி அடிப்படையிலான இனக்குழுக்கள் இறுதியில் ஆக்கம் பெறுவதற்குப் பல காரணிகள் உதவின. அப்படி முதலில் தெளிவாக மொழி அடிப்படையில் உருவாகிய இனக்குழு தென் இந்தியாவின் தென் கிழக்குப் பாகத்தில் உருவாகியது. இங்கு தமிழ் மொழி தென்னிந்தியா, இலங்கைப் பிராந்தியத்துப் பிற மொழிகளைக் காட்டிலும் கூடுதலாக வளர்ச்சி பெற்று ஓர் இலக்கிய மொழியாக மாறியது. சமஸ்கிருதம் மற்றும் பிராகிருதம் ஆகியவற்றின் தாக்கத்தினால் அடக்கப் படாது, அரசர்களின் ஆதரவைப் பெற்று அது அரச சபை மொழியாக உயர்வுபெற்றது.

ஆனால், இலங்கையில் ஒரு வேறான நிலைமை காணப்பட்டது. இங்கும் ஆதி இரும்புக் காலப் பண்பாடு, சமஸ்கிருத மயமாக்கம் மற்றும் தூர வர்த்தகம் ஆகிய காரணிகள் செயற்படத் தொடங்கப் பிராகிருத மொழிகளும் திராவிட மொழிகளும் கூடவே பரவின. இவ் வளர்ச்சியுற்ற மொழிகள் இடைக்கற்கால மக்களின் பழைய மொழிகளை அகற்றித் தாய்மொழி மாற்றத்தை விளைவித்தன. இலங்கையின் பெரும்பாகத்தில் ஒரு புதிய பிராகிருத மொழி உருவாகியது.

இது மேற்கு இந்தியப் பிராகிருதங்களின் பண்புகளையும் கிழக்கு இந்தியப் பிராகிருதங்களின் பண்புகளையும் உள்ளடக்கித் தனக்கேயுரிய சில உள்ளூர்ப் பண்புகளையும் சேர்த்து உருவாகிப் பழைய மொழிகளுக்குப் பதிலாக இலங்கையில் பெரும்பாகத்து மக்களுடைய தாய்மொழியாகியது. இலங்கையின் வடபாகத்திலும் வட கிழக்கிலும் வடமேற்கிலும் தமிழ்மொழி ஆதிக்கம் பெற்று அங்கு வாழ்ந்த மக்களின் தாய்மொழியாகியது. புதிய பிராகிருதத்துக்கும் தமிழுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியில் தமிழுக்குச் சாதகமாகச் சில புவியியல் காரணிகள் செயற்பட்டிருந்தும் தமிழ்மொழி மற்ற மொழியை அகற்றி வெற்றி பெறத் தவறியது.

இதனால் இறுதியில் இரு மொழிகளும் இலங்கையில் நிலைபெற்றன.

### ஆதிவரலாற்றுக் காலம்

*பொ.ஆ.மு.250-பொ.ஆ.300*

இலங்கையின் ஆதிவரலாற்றுக் காலம் ஏறக்குறைய பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டின் இறுதி வரையுள்ள காலம் எனலாம். இக்காலப் பகுதியின் வரலாற்றை அறிந்துகொள்ளப் பல வகைப்பட்ட மூலாதாரங்கள் உள. முதலில், இலக்கிய ஆதாரங்கள் முக்கியமான வகையில் கிடைத்துள்ளன. இரண்டாவதாக நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அடுத்து, பல நாணயங்களும் இக்காலத்துக்குக் கிடைத்துள்ளன. இவற்றை விட, மிகவும் முக்கியமான தொல்லியல் சான்றுகள் அகழ்வாய்வுகளின் மூலமாகப் பெறப்பட்டுள்ளன.

இலக்கிய ஆதாரங்களாகக் கிடைப்பவை முக்கியமாகப் பாளி வரலாற்று நூல்களாகும். பழைய சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த நூல்கள் எதுவும் இப்பொழுது இல்லை. தமிழ்ச் சங்க நூல்களில் இலங்கையைப் பற்றியோ இலங்கையில் வாழ்ந்த மக்களைப் பற்றியோ குறிப்பிடத்தக்க தகவல்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. பாளி வரலாற்று நூல்களுள் மிகப் பழையது தீபவங்ஸ நூல்.

இதன் பின்னர் எழுதப்பட்டது மஹாவங்ஸ நூல். இரண்டும் ஆதியிலிருந்து பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டின் இறுதி வரையுள்ள வரலாற்றை எடுத்துரைக்கின்றன. இவற்றில் அனுராதபுரம் அரசு பற்றிய தகவல்களும் பௌத்த சங்கம் பற்றிய தகவல்களுமே அதிகமாக உள்ளன. இலங்கையில் வாழ்ந்த தமிழர் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவு.

கல்வெட்டுக்கள் பெருந் தொகையாகக் கிடைத்திருப்பினும், இவை பெரும்பாலும் சமயம் சார் மூலாதரங்களே. நூற்றுக் கணக்கில் பாறைகளிலும் குகை முகப்புக்களிலும் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் பௌத்த சங்கத்துக்கு அளிக்கப்பட் தானங்களையே பெரும்பாலும் பதிவுசெய்து காட்டுகின்றன. இவை உயர் குழாத்தினர் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்திய பிராகிருத மொழியில் உள்ளன. பௌத்த சங்கத்துக்குத் தானம் வழங்கியோருள் தமிழ்ப் பௌத்தர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இத் தமிழர்களும் பிராகிருதத்தையே கல்வெட்டுக்களில் பயன்படுத்தினர்.

பிராகிருதப் பெயர்களையே கொண்டிருந்தனர். பிராகிருதப் பெயர்களை தமிழரும் பிறரும் தரித்திருந்த காரணத்தால் தமிழர் எல்லோரையும் அடையாளங் காணமுடியாது. சிலர் தம் பெயருடன் இனக் குழுப் பெயராகிய் தமெட என்ற பெயரையும் குறிப்பிட்டிருப்பதால் அவர்களை மட்டும் தமிழர் என்று இலகுவில் அடையாளங் காணமுடிகின்றது.

கல்வெட்டுக்களுக்கு அடுத்ததாக எழுத்துடன் கூடிய தொல்லியல் சான்றுகள் என்ற வகையில் நாணயங்கள், மட்பாண்ட ஓட்டுக் கீறல்கள் மற்றும் ஒரு முத்திரை ஆகியவை இக்காலப் பகுதியைச் சேர்ந்தவையாகக் கிடைத்துள்ளன. இவை முக்கியமான வகையில் கல்வெட்டுக்களால் பெறப்படும் சான்றுகளை மேலும் வலுப்படுத்துகின்றன.

இவற்றைவிட, மேற்கு இலங்கையிலும் வடக்கு இலங்கையிலும் பரவலாகக் கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகளாகச் சவ அடக்கங்களின் சான்றுகள் உள்ளன. இவற்றை இலகுவில் எந்த ஒரு குறிப்பிட்ட இனக் குழுவுடனும் அடையாளம் காண முடியாது என்பது தமிழர் குடியேற்றங்களைக் கண்டுகொள்ள இவை பயன்படுத்துவதற்குத் தடையாய் உள்ளது எனலாம். எனினும் இச் சவ அடக்கங்களுக்கு அண்மையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் இவற்றுக்கு விளக்கம் கொடுக்க உதவுவதால் இரு வகைப்பட்ட மூலாதாரங்களையும் ஒப்பிட்டுச் சில சுவையான தகவல்களைப் பெறலாம்.

### தமிழர் குடியிருப்பு: மொழியியல் சான்று

பிராமிக் கல்வெட்டுக்களின் மொழியை வரலாற்று மொழியியலாளர் ஆய்வு செய்தால், இலங்கையில் பிராகிருத மொழி பரவிய காலத்தில் வாழ்ந்த மக்களுடைய மொழிகள் பற்றிய சில மறைமுகமான, ஆனால் மிகுந்த ஆர்வமூட்டும், தகவல்களைப் பெற இடமுண்டு. பிறநாடுகளில் ஆதி வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மக்கள் தொடர்பான இப்படியான ஆய்வு முறைகளைப் பயன்படுத்தித் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, இந்து–ஆரிய மொழிகள் வடமேற்கு இந்தியாவில் பரவிய காலத்தில் அங்கு முன்னிருந்து வாழ்ந்த மக்கள் பற்றிய சில தகவல்களை வேத நூல்களின் மொழியை ஆய்வு செய்த வரலாற்று மொழியியலாளர் தெரிவித்துள்ளனர். வட இந்தியாவில் சமஸ்கிருதமும் பிற இந்து–ஆரிய மொழிகளும் பரவுவதற்கு முன் திராவிட மொழிகளும் முண்டா மொழிகளும் பேசப்பட்டன என்ற கோட்பாடு மொழியியல் சான்று கொண்டு முன்வைக்கப்பட்ட

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

கோட்பாடாகும்.ரிக் வேதத்திலும் பிற்பட்ட வேத நூல்களிலும் சில திராவிடச் சொற்களும் முண்டாமொழிச் சொற்களும் காணப்படுகின்றன. இதற்கக் காரணம் இம் மொழிகள் ஏலவே வட இந்தியாவில் வழக்கில் இருந்தபடியால் புதிதாக வந்த மொழியாகிய சமஸ்கிருதத்தில் அப் பழைய மொழிகளின் தாக்கம் ஏற்பட்டு, அம் மொழிகளைச் சேர்ந்த சில சொற்கள் சமஸ்கிருதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டமையே. இவ்வாறே ஜெர்மானிய மொழிகள் பிரித்தானியாவில் பரவியபோது, அங்கு முதலில் வாழ்ந்த கெல்டிக் மக்களுடைய மொழிகளின் சொற்கள் ஜெர்மானிய மொழிகளில் சேர்க்கப்பட்டுப் பின்னர் உருவாகும் ஆங்கிலத்தில் இடம்பெற்றன. (தொடரும்)

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915]

# கல்லடி வேலனும் 3

கீழைத் தேசங்களின் அறிவு நாட்டமும் அறிவுப் பசியும் அதிகமாக இருந்ததென்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். அச்சுக்கலையின் அறிமுகம் இங்கு வருவதற்கு இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பே அதெனியர்களைப் (புராதன கிரேக்க நாகரிக காலத்தில் வாழ்ந்த அதென்ஸ் நகரத்தினர்) போன்று, இவர்களும் எதையும் அறிந்துகொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், அறிவைப் பரப்புவதில் தேர்ச்சி பெற்றவர்கள் நகர்ப்புறங்களில் வேண்டியபோதும்,மிகவும் தொடர்புகள் குறைந்த கிராமப் புறங்களிலும் தொடர்ந்து இத்தகைய வழிமுறையைப் பின்பற்றி வந்தனர் எனவும் டிக்பி குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. (Digby, 1875:5)

தமிழில் அச்சுக்கலையின் ஆரம்பம் பற்றி தகவல்கள் கவனத்தை ஈர்ப்பனவாகவே உள்ளன. இந்தியாவிலேயே முதல் முதல் அச்சு வாகனத்தை அலங்கரித்த மொழியாக தமிழ் விளங்கியுள்ளது. தமிழ் எழுத்துக்களுக்கு அச்சு வடிவத்தை முதன் முதலில் ஆக்கிக் காட்டியவர்கள் டேனிஷ் மதகுருமார்களே. (Priolkar,1958:11)

அச்சுக்கலை அறிமுகப்படுத்தப்பட்ட போது, முதலில் பழைய நூல்களும், துண்டுப் பிரசுரங்களுமே அச்சிட்டு வெளியாக்கப் பட்டன. பாரம்பரிய எழுது கருவிகளுக்குப் பழக்கப்பட்ட சமூகத்தவர்கள் மத்தியில், இப் புதிய முறை உடனடியாக வாசிக்கும் பழக்கத் தைத் தூண்டக்கூடியதாக இருக்கவில்லை. மக்கள் அவற்றை வெறுப்புடனேயே பார்த்தனர்.

பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கிய பின்னரே அச்சுப் பதித்த நூல்களையும், துண்டுப்பிரசுரங்களையும் வாசிக்கத் தொடங்கினர். (Digby,1875:6)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா, இலங்கை ஆகிய பகுதிகளில் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இப் பத்திரிகைகளை அவை வெளியிடப்பட்ட மொழியை அடிப்படையாகக் கொண்டு, மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1.ஆங்கிலப் பத்திரிகைகள் (English Papers)

2. ஆங்கில -பிரதேச மொழிப் பத்திரிகைகள் (Anglo-Vernacular Papers)

3.பிரதேச மொழிப் பத்திரிகைகள்( Vernacular Papers)

1875 ஆம் ஆண்டில் இலங்கை, இந்திய பகுதிகளில் 166 ஆங்கிலப் பத்திரி கைகளும், 382 ஆங்கில- பிரதேச மொழிப்பத்திரிகைகளும், பிரதேச மொழிப் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டிருந்தன. இது பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில், அரச மொழியாக ஆங்கிலம் இருந்தபோதிலும், மக்களின் தொடர்பு ஊடகம் என்ற வகையில் பிரதேச மொழிகள் பெற்றிருந்த முக்கிய பங்கினைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. அக்காலத்தில் மிஷனரியாகவும், பத்திரிகையாளராகவும், இலங்கையிலும் இந்தியாவிலும் தொழிற்பட்ட வில்லியம் டிக்பி, அக்காலத்தில் இப் பகுதிகளில் வெளிவந்த, பிரதேசம் சார்ந்த பத்திரிகைகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றினை எழுதி வெளியிட்டுள்ளார். (Digby, 1875:1-40) 1875 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இக் கட்டுரையே பிரதேசம் சார்ந்த பத்திரிகைகள் பற்றி முதன்முதலாக எழுதப்பட்ட கட்டுரையாக இருக்கலாம்.

ஐரோப்பிய காலனித்துவ ஆதிக்கமே அச்சுக்கலையின் உபயோகத்தை இலங்கையருக்கு அறிமுகப்படுத்தியது. அமெரிக்க மிஷனரிமார்கள், கல்வி விருத்தியின் பொருட்டு 1820 இல் அமெரிக்காவிலிருந்து அச்சியந்திரத்தினை வரவழைத்தனர். அதற்கான எழுத்துக்களை இந்தியாவிலிருந்து பெற்றனர். அதற்கு இலங்கை ஆள்பதி தடை விதித்தமை காரண மாக அந்த அச்சியந்திரம் நல்லூர் சேர்ச் மிஷன் சபையினரிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்த இயந்திரத்தின் வழியாக 'முத்தி வழி' என்ற ஆக்கத்தினை வெளியிட்டனர். அந்த அச்சியந்திரம் அமெரிக்க மிஷனரிமார்களால் மீளப் பெறப்பட்டு, 1834 ஆம் ஆண்டில் மானிப்பாயில் பதிப்பு வேலைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டது. அவர்களே 1841 இல் யாழ்ப்பாணத்தில் முதலாவது பத்திரிகையாக '*உதயதாரகை*' எனத் தமிழிலும் '*Morning Star*' என ஆங்கிலத்திலும் பெயர் கொண்ட இருமொழிப் பத்திரிகையினை வெளியிட்டனர். (வேலுப்பிள்ளை, 1984:132, இராசநாயகம் 1934,130) இதுவே யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் துறையின் ஆரம்பமாக அமைந்தது.

1853 இல் வைமன் கதிரவேற்பிள்ளை 'வித்தியாதர்ப்பணம்' (Literary Mirror) என்ற பத்திரிகையை வெளிப்படுத்தியிருந்தார். 1862 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலிருந்து, கூல்ட் என்பவர் '*Jaffna Freeman*' என்ற ஆங்கிலப் பத்திரிகையைத் தொடக்கி நடாத்தி வந்தார். அப் பத்திரிகை சிறிது காலத்தில் வெளிவராது போனது (இராசநாயகம்,1934:17).

1863ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் '*Ceylon Patriot*' (இலங்காபிமானி) என்னும் ஆங்கிலப் பத்திரிகையை, நியாயவாதியான (Advocate) (முன்குறிப்பிட்) வைமன் கதிரவேற்பிள்ளை பிரசுரிக்க ஆரம்பித்தார்.1865 ஆம் ஆண்டில் சலோமன் ஜோன் பிள்ளை என்பவர் அப் பத்திரிகைக் குச் சொந்தக்காரனும், ஆசிரியருமானார். அவருக்குப் பின் நியாயதுரந்தரராகிய ஆ.கதிரவேலு, அவர் தம்பி ஆ.கனகரத்தினம் முதலியோர் அப் பத்திரிகையை நடாத்தி வந்தனர். 1871 ஆம் ஆண்டில் ஹியூஸ் (Hughes) என்பவரால் '*Jaffna News*' என்னும் ஆங்கிலப் பத்திரிகை வெளியிடப் பட்டது. இது சிறிது காலத்தில் வெளிவராது போனது. (Martin 1922:218)

1876 ஆம் ஆண்டில் '*சத்திய வேத பாதுகாவலன்*' எனத் தமிழிலும் '*Catholic Guardian*' என ஆங்கிலத்திலும் பெயர் கொண்ட இருமொழிப் பத்திரிகை, கத்தோலிக்க மதம் சார்ந்த பத்திரிகையாக வெளிவந்தது. (ஜெயசீலன், 1997:155) 1877 இல் '*இலங்கை நேசன்*' ('*Lanka Snahan*') பத்திரிகையும், 1880 இல் '*சைவ உதயபானு*'

**திருமதி.சோ.கிருஷ்ணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

எனும் பெயர் கொண்ட பத்திரிகையும்,1881 இல்'*சைவசம்போதினி* என்ற கையெழுத்துப் பத்திரிகையும் 1882 இல் '*விஞ்ஞான வர்த்தனி* என்ற பத்திரிகையும் வெளியிடப் படத் தொடங்கின. 1884 ஆம் ஆண்டில் '*சைவாபிமானி* என்ற பத்திரிகை வல்வை பொ.ஞானசபாபத்திப்பிள்ளை என்பவரால் தொடங்கி நடத்தப்பட்டதென அறியமுடிகின்றது. (சிவனேசச்செல்வன், 1974:349) 1885 தொடக்கம்'*சன்மார்க்க போதினி*' என்ற பத்திரிகை வெளியிடப்படத் தொடங்கியது. 1889 இல் '*இந்துசாதனம்*' வெளியிடப்பட்டது. 1899 ஆம் ஆண்டு வரை ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் கொண்ட இரு மொழிப் பத்திரிகையாகவே இப் பத்திரிகை வெளிவந்தது. (Martin.1922:218). (தொடரும்)

# ஈழத்தமிழர் பிரச்சினை அரசியலாகட்டும்

இலங்கை இராணுவத்தின் தாக்குதலிலும் விமானப்படையின் தொடர் குண்டு வீச்சிலும் நாளும் அழிந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழ் இனத்தைக் காப்பாற்ற போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசினால் மட்டுமன்றி மாநில அரசினாலும் கைவிடப்பட்டதால் தமிழ் நாட்டு மக்களிடையே எழுந்துள்ள கொதிப்பு தமிழக அரசியல் போக்கில் பிரதி பலிக்கும் என்ற கருத்து வேகமாக பலம்பெற்று வருகிறது.

ஈழத் தமிழர்கள் மீது தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்ட நிலையில், அவர்களைக் காக்க போர் நிறுத்தம் செய்யுமாறு மத்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் தமிழ் நாட்டில் இருந்து ஒரு சேர எழுந்த குரல் சட்டப் பேரவையில் தீர்மானங்களாகவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒருமித்த தீர்மானங்களாகவும் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசிற்கு தெரிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில் தமிழர்களின் எண்ணங்களை -ஈழத்தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை -வெளிப்படுத்த உண்ணாவிரதம் , மனித சங்கிலி, மறியல், மாநாடு என்று ஜனநாயக ரீதியான எல்லா வழிகளிலும் வற்புறுத்தப்பட்டது.

தமிழ் நாட்டில் ஏற்பட்ட இந்த எழுச்சி இலங்கை அரசை அச்சத்திற்குள்ளாக் கியது. தமிழர்கள் மீதான தாக்குதலின் வேகம் குறைந்தது. அந்த நிலையில் தான் இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ டில்லி வந்து பிரதமரையும் வெளியுறவு அமைச்சர் பிராணப் முகர்ஜியையும் சந்தித்துப் பேசினார். அப்போது ஈழத் தமிழர்களின் பாதுகாப்பு



மட்டுமின்றி இலங்கை கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படும் தமிழக மீனவர்கள் பாதுகாப்பு குறித்தும் உத்தரவாதம் பெறப்பட்டதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஆனால் பசில் ராஜபக்ஷ இலங்கை திரும்பியதும் அதுவரை நிறுத்தப்பட்டிருந்த விமானப்படைத்தாக்குதல் மீண்டும் தொடரப்பட்டது. முன்பை விட தீவிரமாக. அதன் பின்னர் இது நாள் வரை எவ்வித . கட்டுப்பாடும் இன்றி ஈழத்தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது இலங்கை அரசு படைகள் .

போரை நிறுத்து என்று மீண்டும் மீண்டும் தமிழ் நாட்டின் சட்டப்பேரவையில் இருந்தும் மக்கள் மன்றத்தில் இருந்தும் போராட்டங்கள் வாயிலாகவும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் யாவும் மத்திய அரசால் , பிரதமர் மன்மோகன் சிங்கால் கண்டுகொள்ள்ப்படவில்லை.

பிரதமருடன் அனைத்துக்கட்சித் தலைவர்கள் நடத்திய சந்திப்பும் எந்த பலனையும் அளிக்கவில்லை.

தைத்திங்கள் பிறப்பும்,பொங்கல் பண்டிகையும் ஒரு சோக நிகழ்வுகளாக தமிழ் நாட்டில் ஆன நிலையில் இலங்கைக்கு பயணம் செய்த வெளியுறவுச் செயலர் சிவ் சங்கர் மேனன்,போர் நிறுத்தம் பற்றி பேசாதது மட்டுமல்ல தமிழர்கள் வன்மையாகக் கண்டித்துக்கொண்டிருக்கும் இலங்கை அரசுடன் ஒரு இணக்கமான,

> **ஈழத்தமிழர் பாதுகாப்பு, அவர்களின் சுதந்திரமான வாழ்வு ஆகியவற்றை உறுதி செய்யவும் அதோடு தமிழக மீனவர்களை காப்பாற்றவும் அவர்களின் மீன் பிடி உரிமையை மீண்டும் நிலை நிறுத்தவும் ஒரே வழி -இவ்விரு பிரச்சினைகளையும் தேர்தல் அரசியலாக்குவதே.**

ஆழமான, இதமான உறவு ஏற்பட்டுள்ளது என்று அறிவித்தது, அவருடைய பயண நோக்கத்தையே சந்தேகிக்க வைத்தது.



தமிழக கடையடைப்பு போராட்டத்தின் போது...

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரச படைகள் நடத்தும் தாக்குதலை இந்தியா மௌனமாக ஆமோதிக்கிறதா? என்று சந்தேகம் எழுந்தது. ஏற்கனவே ராடர் உதவி, பின்னர் இந்திய அயல் உளவு அமைப்பான ரோ விமானம் பறந்ததால் ஏற்பட்ட சர்ச்சை ஆகியவற்றால் எழுந்த அந்த சந்தேகம் சிவ் சங்கர் மேனனின் பயணத்தாலும்,பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளாலும் பலப்பட்டது.

அவருடைய பயணத்தால் ஏற்பட்ட கோபம் தான் சட்டப்பேரவையில் ‘அய்யகோ’ என்று துவங்கும் போர்நிறுத்தத்தை வலியுறுத்த நிறைவேற்றப்பட்ட இறுதித் தீர்மானம் .இந்த தீர்மானத்திற்குப் பின்னர் தமிழக முதல்வருக்கு தெரியப்படுத்திவிட்டு இலங்கை சென்ற பிரணாப் முகர்ஜி ஜனாதிபதி ராஜபக்ஷ, அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ரோகித போகொல்லாகம ஆகியோரை சந்தித்து விட்டு ஒரே நாளில் நாடு திரும்பினர்.

போர் நிறுத்தம் பற்றி பேசியிருப்பார் என்று மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் வெளியுறவு அமைச்சரும் பிரணாப் முகர்ஜியும் விடுத்த அறிக்கைகள் உலகத் தமிழர்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது மட்டுமின்றி, தமிழனைத் தாண்டி இலங்கை அரசுடன் ஒரு நல்லுறவை இந்திய அரசு கொண்டுள்ளதும், தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசு வகுத்துள்ள திட்டத்தை எவ்வித எதிர்ப்பும் இன்றி இந்திய அரசு ஏற்றுக்கொண்டு ஆதரவுக்கரம் நீட்டியுள்ளதும் தெரிந்ததும் தமிழர்கள் மத்தியில் கொந்தளிப்பு உருவானது.

அதற்கு வடிகாலாகவே இலங்கைத் தமிழர் பாதுகாப்புப்பேரவை நடத்திய ஒரு நாள் வேலை நிறுத்ததிற்கு கிடைத்த பரவலான ஆதரவாகும். கடந்த புதன் கிழமை நடந்த வேலை நிறுத்தம் மத்திய அரசிற்கு மட்டுமன்றி, தமிழக அரசுக்கும் ஒரு தெளிவான ஒரு செய்தியை தந்துள்ளது. அது, நாளும் கொள்ளப்படும் ஈழத் தமிழர்களின் நலன் காக்க எல்லா அரசியல் வேறுபாடுகளையும் தாண்டி தமிழர்கள் ஒன்றிணைவோம் என்பதே.

தமிழக மக்களிடையே செல்வாக்கு பெற்றுத் திகழும் முதல் மூன்று கட்சிகளாகக் கருதப்படும் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ் ஆகியவற்றின் எதிர்ப்பு மற்றும் ஒத்துழையாமையைத் தாண்டி, இந்த வேலை நிறுத்தம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது.

இதுவரை அரசியல் தலைமைகளைச் சார்ந்தே தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்திய தமிழக மக்கள், அந்தத் தலைமைகளின் ஒத்துழைப்பு இல்லாத நிலையிலும், உணர்வு ரீதியாக ஒன்றிணைந்து நின்றது, இதற்கு மேல் அரசியல் ரீதியான ஒரு மாற்றத்திற்கு முதல் திறவாகவே தெரிகிறது.

தமிழ் நாட்டில் ஈழத் தமிழர் பிரச்சினை பல காலகட்டங்களில் பலமாக எதிரொலித்தாலும் அது என்றைக்குமே அரசியல் பிரச்சினையாக – அதாவது தேர்தல் பிரச்சனையாக – ஆக்கப்பட்டதில்லை. தமிழ் நாட்டில் இதுவரை நடைபெற்ற தேர்தல்கள் யாவும், அது பாராளுமன்றத் தேர்தலாகட்டும், மாநிலங்களவைத் தேர்தலாகட்டும், தமிழ்நாட்டின் பிரச்சினை மற்றும் கொள்கை ரீதியான அடிப்படைகளில்தான் நடந்துள்ளது.

ஈழத் தமிழரின் நலம் இது நாள்வரை புறக்கணிக்கப்பட்டதற்குக் கூட இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுவதுண்டு.

ஆனால் இம்முறை, தாங்கள் சார்ந்த கூட்டணியை விட்டு விலகி தமிழின உணர்வு ரீதியாக – தமிழக மக்களின் எண்ணங்களை எதிரொலிக்கும் விதமாக– தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள்



இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம்

ஒன்றிணைந்தது இதுவே முதல் முறை. அவ்வாறு ஒன்றிணைந்து நடத்திய மக்கள் இயக்கம், ஆளும் கட்சியின் கடும் எதிர் வேலைகளுக்கு இடையிலும், முக்கிய எதிர் கட்சியின் பங்கேற்பு இல்லாத நிலையிலும், பெரும் வெற்றி பெற்றுள்ளதென்றால், தமிழின உணர்வு தமிழ்நாட்டு மக்களின் அரசியல் சிந்தனைப் போக்கையும் மாற்றியுள்ளது என்பதேயே காட்டுகிறது.

(இதனை நன்கு உணர்ந்ததால்தான் , போர் நிறுத்தத்தை வலியுறுத்தி நடந்த கடையடைப்புக்கு தன்னால் இயன்ற எதிர்ப்பை வெளிப்படுத்திய தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி, ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நடைபெறும் போராட்டங்களை தனது ஆட்சிக்கு முடிவுகட்டுவதற்கான சதி என்றே குறிப்பிடுகிறார்)

ஈழத் தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இதுவரை கடைபிடிக்கப்பட்ட சாத்வீக வழிமுறைகள் எதுவும் எந்தப் பலனும் அளிக்காத நிலையில், அதனை அரசியலாக்குவதே அவர்களைக் காப்பாற்றுவதற்கும், அவர்களின் விடுதலையை உறுதிப்படுவதற்கும் உரிய பலத்தை தமிழர்களுக்கு அளிக்கும்.

இதில் மற்றொரு முக்கிய பிரச்சினையும் அடங்கியுள்ளது. அதுவே தமிழ்நாட்டின் மீனவர்களின் பாதுகாப்பு. இதற்குமேல் மீனவர்கள் மீது தாக்குதல் நடக்காது. இலங்கை கடற்படையினர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தமாட்டார்கள் என்று பிரணாப் முகர்ஜியும் பசில் ராஜபக்ஷவும் விடுத்த கூட்டறிக்கையில் மட்டுமின்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளித்த உறுதி மொழியும் காற்றில் பறந்துவிட்டது.

எனவே சிங்கள கடற்படையிடமிருந்து தமிழக மீனவர்களை காப்பாற்ற வேண்டுமென்றால் கச்சதீவு தமிழர் கைக்கு வந்தாக வேண்டும். இதனை நடைமுறைப்படுத்த ஒரே வழி , ஈழப் பிரச்சினையுடன் தமிழக மீனவர்கள் பாதுகாப்பு மற்றும் பாரம்பரிய உரிமை மீட்பையும் இணைத்துப் பார்ப்தே ஒரே வழியாகும்.

ஆக ஈழத் தமிழர் பதுகாப்பு, அவர்களின் சுதந்திர வாழ்வு ஆகியவற்றை உறுதி செய்யவும், அதோடு தமிழக மீனவர்கள் காப்பாற்றவும், அவர்களீன் மீன்பிடி உரிமையை மீண்டும் நிலை நிறுத்தவும் ஒரே வழி **இவ்விரு பிரச்சினைகளையும் தேர்தல் அரசியல் ஆக்குவதே.**

தமிழ்நாட்டின் அரசியல் தமிழ் இன உணர்வுடன் கூடிய உரிமைகளை மீட்பதை இலக்காக கொண்ட அரசியல்


## தமிழகத்திலிருந்து தமிழன்

கட்சிகளாகவும், அதனை தங்களின் வசதியான அரசியலிற்காக மறுக்கும் கட்சிகள் என்றும் பிளவுபடட்டும் இப்படிப்பட்ட பிளவே இந்திய அரசியலிற்கு தமிழகத்திலிருந்து ஒரு சரியான சமிக்ஞையை விடுக்கும். தேச அளவிலான கட்சிகள் தமிழின உணர்வையும் உரிமையை காப்பாற்றுவதற்கும் மதிப்பதற்கும் இவ்வாறான அரசியலே வழி வகுக்கும்.

இப்படிப்பட்ட அரசியல் வழியே , தமிழர்களின் உரிமையும் , சுதந்திரத்தையும் தங்களின் அரசியலிற்காக அந்நாட்டிற்கு பேரமாக்கும் காங்கிரஸைப் போன்ற கட்சிகளை ஒழித்துக் கட்ட உதவும் என்பதில் வேறு கருத்தில்லை.

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒன்றிணைந்து செயற்படுவோம்

## அ.தி.மு.கவுக்கு கருணாநிதி அழைப்பு



(சென்னை)

'இலங்கைத் தமிழர் பிரச்சினையில், இனியாவது ஒற்றுமை சூழலை உருவாக்க உதவ வேண்டும்' என, அனைத்துக் கட்சிகளுக்கும் முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் கருணாநிதி எழுதிய கடிதத்தில், இந்தக் கடிதம் தி.மு.க., உடன்பிறப்புக்களுக்கு மட்டும் என்று கருதாமல், தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளின் தொண்டர்களையும் விளித்து எழுதுவதாகக் கருதி, விடுக்கும் வேண்டுகோளை சிந்தித்து ஏற்பீர்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அறநெறியிலும், ஆயுதம் தாங்கி நடத்திய போராட்டங்களிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வு காணாமல் நீடிப்பதற்குக் முக்கிய காரணம், இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கிடையே நடந்த சகோதர போராட்டங்களும், தமிழகத்தில் இயங்கும் அரசியல் இயக்கங்களுக்கிடையில் தொடரும் சகோதர யுத்தங்களும் தான்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், ஒரே விதமான உணர்வும், கொள்கையும் கொண்டவர்கள் தமிழகத்தில் ஒற்றுமையாக செயல்பட முடிந்திருக்கிறதா என்பதை கடந்த காலத்தை நினைத்து, இனியாவது ஒற்றுமை சூழலை உருவாக்க உதவவேண்டும் என்று, எல்லா இயக்கங்களின் உடன்பிறப்புக்களையும் கேட்டுக் கொள்கிறேன். அனைத்துக் கட்சிக் கூட்ட முடிவின்படி, எம்.பி, பதவிகளைத் துறக்க தி.மு.க. தவிர வேறு கட்சிகள் முன்வராததால் தீர்மானம் கிடப்பில் போடப்பட்டது. அடுத்து நடந்த மனிதச் சங்கிலியை அ.தி.மு.க.-ம.தி.மு.க. மற்றும் சில கட்சிகள் புறக்கணித்துவிட்டன. பிரதமரை சந்திக்கச் சென்றபோதும் கலந்து கொள்ளவில்லை. பிரதான எதிர்க்கட்சியின் தோழமைக் கட்சிகள், இலங்கை பிரச்சினைக்காக தனித் தனியே நடத்திய அறப் போர்களிலும் அக் கட்சி கலந்துகொள்ளவில்லை. ஆளுங்கட்சிக்கும் முறையான அழைப்பு இல்லை. அயல் நாடுகள் பலவும் அக்கறையுடன், இலங்கையில் அப்பாவித் தமிழர்களின் அழிவைத் தடுக்க அறிவிப்புகள் செய்துள்ளன.

'இலங்கைத் தமிழர் நல உரிமை பேரவை' சார்பில் இம்மாதம் தொடர்ந்து நடத்த இருக்கும் பேரணிகள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்களில் நமக்குள்ளே போராட்டம் நடத்திக் கொண்டிராமல், கட்சி வேறுபாடுகளை மறந்து, இரண்டு பிரிவுகளாய் இருப்பினும் 'கத்தரிக் கோல்' போல் இருந்து காரியமாற்ற கடமைப் பட்டவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அ.தி.மு.க., சார்பில் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது கொண்டிருந்த இலங்கைத் தமிழர் பற்றிய கொள்கையை இன்றும் அக் கட்சியின் உடன்பிறப்புகள், ஜெயலலிதா தலைமையில் பின்பற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இரு பிரிவாக நமது ஆதரவு அணிகள் இயங்குவது தவிர்க்க முடியாதது என்றாலும், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளையும் உயிர்களையும் பாதுகாப்பதில் ஒன்றாக இருப்போம். எல்லோரும் ஒன்றுபட்டால் இலங்கை தமிழினம் காக்கப்படும் என்பது உறுதி. இவ்வாறு கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# பெப்.12 இல் தொடர் முழக்க போராட்டம்

## மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் அறிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வலியுறுத்தி எதிர்வரும் 12 ஆம் திகதி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் மாநிலம் தழுவிய போராட்டம் நடக்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலர் வரதராஜன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்புக்குள் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு சுயாட்சியும், சம உரிமையும் கூடுதல் அதிகாரமும் வழங்கும் வகையில் சுமுகத் தீர்வை ஏற்படுத்த இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களைப் பாதுகாக்கவும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் இந்திய அரசு, இரு நாடுகளுக்கு இடையே உள்ள நல்லுறவின் அடிப்படையில் ராஜிய ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை தொடர் முழக்கப் போராட்டம், அனைத்து மாவட்ட தலை நகரங்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


திருப்பூரில் மாநில செயலர் வரதராஜன் கலந்துகொள்வார் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# தமிழக மீனவர்களை ஐஸ் கட்டியில் படுக்க வைத்து படையினர் சித்திரவதை

இராமேஸ்வரம் மண்டபத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்களை ஐஸ்கட்டியின் மீது படுக்க வைத்தும் துப்பாக்கி பிரயோகம் நடத்தியும் இலங்கைக் கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் 34 மீனவர்களை சிறைப்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் மண்டபம் கடற்கரையிலிருந்து 50க்கும் மேற்பட்ட படகுகளில் 250க்கு மேற்பட்ட தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். இவர்கள் கச்சதீவு கடற்கரையருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்கள் மீது தடியடி மற்றும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதுடன் அவர்களது படகுகளினுள்ளும் இறங்கி வலைகளை அறுத்தெறிந்து அட்டகாசம் புரிந்துள்ளனர்.

மேலும் படகில் இருந்த ஐஸ்கட்டிகள் மீது மீனவர்களை படுக்க வைத்தும் சித்திரவதை செய்துள்ளனர். இதில் சுமார் 30 மீனவர்கள் வரையில் காயங்களுடன் தப்பியோடி வந்து கரைசேர்ந்துள்ளனர். இதைவிட 34 மீனவர்களைக் கடற்படையினர் சிறைப்பிடித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் குறித்து இராமேஸ்வர காவல் துறையினரும் மீன்வளத் துறை அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)




# ஈழத்தமிழர்களின் படுகொலையை கண்டித்து சீர்காழி காங்கிரஸ் வட்டாரத் தலைவர் தீக்குளிப்பு

நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி காளியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த சீர்காழி வட்டார காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவிச்சந்திரன் (வயது 45) நேற்று சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக முழுக்கமிட்டபடி உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்தார்.

இது பற்றி தெரியவருவதாவது,

சீர்காழி மணல்மேடு பகுதியில் உள்ள சர்க்கரை ஆலை ஒன்றில் வேலை பார்க்கும் ரவிச்சந்திரன் அதிகாலை 2.30 மணிக்கு திடீரென தன் வீட்டிற்கு வெளியே வந்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முழக்கங்கள் இட்டபடியே உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்தார்.

ரவிச்சந்திரனின் உரத்த குரலை கேட்டு ஓடி வந்த அக்கம் பக்கத்தினர் அவரைக் காப்பாற்ற முயற்சித்தனர். ஆனாலும் அதற்குள் ரவிச்சந்திரனின் உடல் 65 சதவீதம் தீக் காயங்களுடன் கருகிவிட்டது.

தீக்குளித்த ரவிச்சந்திரனின் உயிரைக் காப்பாற்ற மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அப்போது ஈழத்தில் தினந்தோறும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களுக்காகவும் அவர்களுக்கு எதுவும் உதவாத தன் கட்சியைக் கண்டித்தும் இந்த தீக்குளிப்பு முயற்சியில் ஈடுபட்டதாக சொல்லியிருக்கிறார் ரவிச்சந்திரன். ரவிச்சந்திரனின் தாயார் சாரதாவும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான் அவர் மகளிர் காங்கிரஸ் பிரிவு உறுப்பினர். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக காங்கிரஸ் வட்டாரத் தலைவர் ஒருவர் தீக்குளித்திருப்பது அந்தப் பகுதியில் பரபரப்பை உண்டாக்கியுள்ளது. (ஓ-6)

# புற்றுநோயை விரைவில் குணப்படுத்தும் நவீன 'ரோபார்ட்' கருவி அறிமுகம்

## சென்னை அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அறிமுகம்

(சென்னை)

புற்றுநோயை விரைந்து குணமாக்கும் நவீன 'ரோபார்ட்' கருவி, சென்னையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அறிமுகம் செய்யப்பட்டது. 'சைபர் நைப் ரோபார்ட்'

புற்றுநோய் மற்றும் உடம்புக்குள் உருவாகும் கட்டிகளைக் குணமாக்குவதற்காக உருவாக்கப்பட்ட 'சைபர் நைப்' என்ற கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரத்தை சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரி வாங்கி இருக்கிறது. இதை அந்த ஆஸ்பத்திரியின் தலைவர் டாக்டர் பிரதாப் சி.ரெட்டி நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

இந்தக் கருவி குறித்து நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியில்,

கதிர்வீச்சு சிகிச்சையில் இந்தக் கருவி முன்னோடியாக இருக்கிறது. புற்றுநோய் இருக்கும் இடத்தை துல்லியமாகக் கண்டறிந்து, அந்த இடத்தில் உள்ள 'செல்'களை மட்டுமே இந்தக் கருவி அழிக்கும். நுரையீரல் போன்ற தொடர்ந்து அசையும் இடங்களில் புற்றுநோய் அல்லது கட்டிகள் இருந்தால், மூச்சைப் பிடித்துக் கொண்டு அசையாமல் இருந்து சிகிச்சை பெற வேண்டும் நிலை முன்பு இருந்தது.

ஆனால் சைபர் நைப் சிகிச்சையில், நோயாளி அசைந்தாலும் அதற்கேற்ப இயந்திரமும் அசைந்து கொடுக்கும். அதில் இருந்து வரும் கதிர்கள் நோய் இருக்கும் இடத்தில் மட்டுமே பாயும். சிகிச்சையின் போது வலி இருக்காது.

உடம்பில் எந்த இடத்தில் புற்றுநோய் இருந்தாலும் அதற்கான சிகிச்சை அளிக்கவும் தற்போது வழி பிறந்துவிட்டது. முந்தைய சிகிச்சையின்படி, நோயுள்ள இடத்தில் 7 கோணங்களில் மட்டுமே கதிர்வீச்சு பாய்ச்சப்படும். ஆனால் இந்த இயந்திரத்தின் தொழில்நுட்பம் மூலம் நோயுள்ள இடத்தின் அனைத்துக் கோணத்திலும் இருந்து கதிர் பாய்ச்சப்படும். இதனால் சிகிச்சையின் கால அளவு மிக மிகக் குறைந்துள்ளது. இதற்கான சிகிச்சைக்கு, முன்பு 8வாரங்கள் எடுக்கும். சைபர் நைப் சிகிச்சைக்கு 4 நாட்கள் போதுமானது. மயக்க மருந்து தேவையில்லை.

கம்ப்யூட்டர் கட்டுப்பாட்டின் படி, நோயின் தன்மை, அதற்கேற்ற சிகிச்சை, அதற்குத் தேவையான கருவிகளை இந்த இயந்திரமே தேர்வுசெய்து சிகிச்சை அளிக்கும். எனவே மனிதத் தவறுகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆரம்பகட்ட புற்றுநோய் என்றால் அதை முற்றிலும் குணமாக்க முடியும். சற்று முற்றின நிலை என்றாலும் நல்ல சிகிச்சை கொடுத்து, வாழ்நாளை மேலும் நீடிக்க முடியும். சிகிச்சை முடிந்த பிறகு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விடலாம்.

இந்த இயந்திரத்தின் விலை ரூ.35 கோடி, ரூ.75 கோடி செலவழித்து இதை நிறுவி இருக்கிறோம். இந்தியாவுக்கு புற்றுநோய் சிகிச்சைக்கு இனி வெளிநாட்டவர்கள் வருவார்கள். சைபர் நைப் சிகிச்சைக்கான கட்டணம் அதிகபட்சம் ரூ. 5 இலட்சமாகும். ஏழைகளுக்காக கட்டணம் குறைக்கப்படும். இந்தியாவில் நகர்ப்புறங்களில் ஆண்டுக்கு 10 இலட்சம் புற்றுநோயாளிகள் புதிதாக உருவாகின்றனர். 30 இலட்சம் பேருக்கு உடனடி சிகிச்சை தேவைப்படுகிறது. நாளொன்றுக்கு 16 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என அவர் தெரிவித்தார். (ஓ-6)

# இலங்கைப் பிரச்சினையில் இரு அணிகளாக பிரிந்து செயற்படுவது வேதனையளிக்கிறது

## திருமாவளவன் தெரிவிப்பு



இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட தமிழகத்தில் இருந்து, மேலும் நெருக்கடியை உருவாக்க வேண்டும் என்று, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை திட்டக்குடியில் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், இலங்கையில் இந்தியக் கிரிக்கெற் அணி மீது கல்வீசி இருப்பதை, மத்திய அரசு வேடிக்கை பார்க்கிறது.

இலங்கை அரசுடன் கூடிக் குலாவுகிறது. இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று சர்வதேச அமைப்புகள் வேண்டுகோள் விடுத்தும், போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசு மறுத்து விட்டது.

இந்திய அரசு, இலங்கை அரசு க்கு அளிக்கும் ஊக் கமே இதற்குக் காரணம்.

தமிழகத்தில் கட்சி வேறுபாடுகளை மறந்து, அனைவரும் ஓரணியில் நின்று போராட வேண்டும். பாதுகாப்புப் பேரவை, உரிமை நலப் பேரவை என இரு அணிகளாகப் பிரிந்து நிற்பது வேதனையைத் தருகிறது.

தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம், விடுதலைச் சிறுத்தைகள் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்துக்கு இல்லை என்றார் திருமாவளவன். (ஓ-6)

# மும்பைத்தாக்குதல் தொடர்பான விசாரணையில் பாக். முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்

## ஐ.நா.பொதுச்செயலர் வலியுறுத்து

(இஸ்லாமாபாத்)

மும்பை தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு பாகிஸ்தான் முழு ஒத்துழைப்பு



அளிக்க வேண்டுமென, ஐ.நா., பொதுச் செயலர் பான் -கி- மூன், தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் சென்ற பான்- கி- மூன், அங்கு அதிபர் ஆசிப் அலி சர்தாரியை சந்தித்துப் பேசினார். அதற்கு முன்னதாக மூன் கூறிய தாவது,

மும்பைத் தாக்குதல் தொடர்பான விசாரணையில், இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து செயல்பட வேண்டும். இந்தியாவுக்கு பாகிஸ்தான் முழு ஒத்து ழைப்பு அளிக்க வேண்டும்.

இரு நாடுகளும் தங்களுக்கு இடையேயான பிரச்சினைகளை அமைதியான வகையில், பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். மும்பை தாக்குதல் குறித்து பாகிஸ்தானும் முழு அளவில் விசாரணை நடத்த வேண்டும். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ படுகொலை குறித்து விசாரணை நடத்த, தன்னிச்சையான குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ஓ-6)

# அமெரிக்க ஜனாதிபதியின் பொருளாதார மீட்பு திட்டத்திற்கு பிடெல் காஸ்ட்ரோ கண்டனம்

(ஹவானா)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பொருளாதார மீட்புத் திட்டத்திற்கு கியூப முன்னாள் ஜனாதிபதி பிடெல் காஸ்ரோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதன் கிழமை இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட கட்டுரையிலேயே அவர் இவ்வாறு கண்டனம் தெரிவித்தார்.


அமெரிக்க சமூகத்தை ஸ்தம்பித நிலையிலிருந்து மீட்க பாரிய தொகைப் பணத்தை அச்சிடுவதை வலியுறுத்துவதாக ஒபாமாவின் திட்டம் உள்ளது என பிடெல் காஸ்ட்ரோ குறிப்பிட்டார்.

ஒபாமா பதவியேற்றபோது அவருக்கு பாராட்டுத் தெரிவித்த பிடெல்காஸ்ரோ கடந்த வாரம் வெளியிடப்பட்ட செய்தியில் காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதலுக்கு அமெரிக்காவே பொறுப்பு என குற்றம் சாட்டியிருந்தார்.

1960களில் கியூபா மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் குறிப்பிடுகையில் அமெரிக்க அதிகாரிகளே அதற்கு காரணம் என அவர் தெரிவித்தார்.

மேற்படி கியூபத் தாக்குதல் இடம் பெற்ற போது பராக் ஒபாமா 6 வயது சிறுவன் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவானது ஏனைய நாடுகளின் பாரிய வளங்களை அபகரித்துக் கொள்ளாமல் தனது அடிப்படைத் தேவைகள் தொடர்பில் நிறைவைக்காண முடியாதுள்ளதாக பிடெல் காஸ்ட்ரோ தெரிவித்தார். (ஓ-6)



## பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்; 52 தீவிரவாதிகள் பலி


(பெஷாவர்)

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க படைகளுக்கு வாகனங்கள் மூலம் கைபர் பகுதி வழியாக பாகிஸ்தானில் இருந்து ஆயுதமும், உணவும் கொண்டு செல்லப்படுகிறது.

இந்த வாகனங்களை கடந்த ஒரு ஆண்டாக தலிபான் தீவிரவாதிகள் வழி மறித்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து, தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் இராணுவம் ஹெலிகொப்டர் மூலம் கைபர் மற்றும் ஒரக்சாய் பகுதிகளில் நேற்று முன்தினம் பயங்கர பீரங்கி தாக்குதலை நடத்தியது. இதில், 52 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களது வெடிமருந்து கிடங்குகளும் தகர்க்கப்பட்டன. (ஓ-6)

# அதிபர் ஒபாமா மனைவி கர்ப்பம் இணையதள வதந்தியால் பரபரப்பு



(லண்டன்)

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் மனைவி மிச்சேல் கர்ப்பமாக உள்ளதாக இணைய தளத்தில் வெளியான தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் ஒபாமாவின் மனைவி மிச்சேல். இவர்களுக்கு மலியா(10), சாஷா (7) என ஏற்கனவே இரு பெண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், லண்டன் இணையதளம் ஒன்றில் மிச்சேல் மீண்டும் கர்ப்பமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அந்த இணைய தளத்தில், மிச்சேல் கர்ப்பமாக உள்ளார். அவருக்கு மூன்றாவது குழந்தை பிறக்கவுள்ளது. இருந்தாலும், இந்த தகவல் உறுதி செய்யப்படவில்லை.

இந்த தகவல் உண்மையானால், அமெரிக்க மக்களுக்கு இது மகிழ்ச்சியான செய்தி. ஏற்கனவே இரு பெண் குழந்தைகள் உள்ள சூழ்நிலையில், தற்போது பிறக்கப் போவது ஆண் குழந்தையாக இருந்தால் மிகவும் சந்தோஷம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஒபாமா குடும்பத்தினருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகையில், எந்த விஷயங்களுக்கு வதந்தி பரப்ப வேண்டும் என்ற அளவே இல்லாமல் போய் விட்டது.

இணைய தளத்தில் வெளியான தகவலின் படி மிச்சேல் கர்ப்பமாக இருந்தால், அது அவருக்கும் ஒபாமாவுக்கும் உள்ள தனிப்பட்ட விஷயம். இதில், மற்றவர்கள் தலையிடக் கூடாது.

மிச்சேல் கர்ப்பமாக இருந்தால் அதை எத்தனை நாளைக்கு அவரால் மறைக்க முடியும். விரைவில் அனைவருக்கும் தெரிந்து விடக்கூடிய விஷயம் தானே அது என்றனர். (ஓ-6)

# சிதைவடைந்த நரம்புக் கலங்களுக்கு பதிலீடாக கணனி "சிப்கள்"

மனித உடலிலுள்ள சிதைவடைந்த இழையங்களை திருத்தியமைக்க உதவக் கூடிய சிலிக்கன் சிப்களை உருவாக்கும் முயற்சியில் பிரித்தானிய எடின் பேர்க் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

மனித நரம்புத் தொகுதியிலுள்ள அடிப்படை நரம்புக் கலங்களுக்கு பதிலீடாகப் பயன்படுத்தக்கூடிய சிலிக்கன் சிப்களை உருவாக்குவதில் தாம் வெற்றியை அண்மித்து விட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

கணனிகளில் பயன்படுத்தப்படும் சிப்களை விட நுண்ணிய இந்த சிப்களை நரம்புக்கல சிதைவுகளுக்கு பதிலீடாக மட்டுமல்லாமல் தசையிழைய சிதைவுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என மேற்படி ஆய்வுக்கு தலைமை தாங்கும் பேராசிரியர் அலன் முர்ரே தெரிவித்தார். (ஓ-6)

# வீட்டுக் காவலில் இருந்த அணு விஞ்ஞானி காதிர்கான் விடுதலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி அப்துல் காதிர் கான் சுதந்திரமான மனிதர். எந்த விதமான தடையும் இல்லாமல் அவர் நாட்டுக்குள் உலா வரலாம் என, பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அணு ஆயுத இரகசியங்களை வெளிநாட்டுக்கு விற்றதாக குற்றம் சுமத்தப்பட்டவர் பாக். அணு விஞ்ஞானி அப்துல்காதிர்கான். இவர், 2004 ஆம் ஆண்டு முதல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.



சமீப நாட்களாக அவருக்கு எதிரான கட்டுப்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டன. தற்போது அவர் தினசரி நாளிதழ் ஒன்றில் கட்டுரையும் எழுதி வருகிறார். இந்நிலையில் தனக்கு எதிராக அரசு விதித்துள்ள மற்ற கட்டுப்பாடுகளையும் தளர்த்த வேண்டும் எனக் கோரி, இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றில் அப்துல்காதிர் கான் மனுத் தாக்கல் செய்தார்.

அவரின் மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், அணு விஞ்ஞானி அப்துல்காதிர் கான் சுதந்திரமான மனிதர்.

அதேநேரத்தில், சில பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அவர் கட்டுப்பட வேண்டும். அவர் பாகிஸ்தானுக்குள் சுதந்தரமாக உலா வரலாம். அத்துடன் ஆராய்ச்சிக்காக அறிவியல் அறக்கட்டளைக்கும் செல்லலாம். மேலும், நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களும் அவரைச் சந்திக்கலாம் என்று உத்தரவிட்டுள்ளது.

இருந்தாலும், கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பாக அப்துல்காதிர் கானுக்கும், பாகிஸ்தான் அரசுக்கும் இரகசிய உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் தான் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் தொலைக் காட்சி அலைவரிசைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்துல்காதிர் கான் இதுபற்றி கூறுகையில்,

''நான் சுதந்திரமான மனிதன் ஆகிவிட்ட தகவலை தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலம் அறிந்து கொண்டேன். நான் இப்போது சுதந்திரமான குடிமகன்'' என்றார். (ஓ-6)

# சீனாவில் நிர்மாணிக்கப்பட்ட அணைக்கட்டே அந்நாட்டில் இடம்பெற்ற பூமியதிர்ச்சிக்கு காரணம்

## விஞ்ஞானிகள் தெரிவிப்பு

(சிசுவான்)

சீனாவில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய அணைக்கட்டே அந்நாட்டில் கடந்த வருடம் இடம்பெற்ற பாரிய பூமியதிர்ச்சிக்கு காரணமென விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

தென்மேற்கு மாகாணமான சிசுவானில் நிர்மாணிக்கப்பட்ட ஸிபிங்பு அணையில் தேக்கி வைக்கப்பட்ட நீரால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாகவே சிசுவான் மாகாணத்தில் 87 ஆயிரம் பேரை பலிகொண்ட பூமியதிர்ச்சி ஏற்பட்டது என சிசுவான் பூகம்பவியல், கனிப் பொருள் பணிமனையைச் சேர்ந்த பான்ட் ஸியாவோ (54வயது) தெரிவித்துள்ளார்.

அதேசமயம், சீன பூமியதிர்ச்சி நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த பூகம்பவியலாளரான லெயிஸிங்லினும், ஸிபிங்பு அணைக்கட்டில் தேக்கி வைக்கப்பட்ட நீரே மேற்படி பூமியதிர்ச்சிக்கு காரணம் என வலியுறுத்தியுள்ளார். (ஓ-6)

## உலக தரிசனம்



அமெரிக்க அதிபர் முதன் முதலாக விமானத்தில் உள்ள பத்திரிகையாளர் அரங்கில் நிருபர்களை சந்தித்துப் பேசினார்...

# புலிகளை முற்றாக அழிக்க இறுதி சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் காங்கிரஸ் அரசு!

கிளிநொச்சி ஆரம்பித்து முல்லைத்தீவின் எல்லை வரை கிட்டத்தட்ட விடுதலைப்புலிகளின் முக்கால் வாசி பிரதேசங்களை தங்கள் வசமாக்கி விட்டது இலங்கை அரசு. தமிழர் பகுதிகள் மீது நடக்கும் அடுத்தடுத்த தாக்குதல்களைக் கண்டித்து உலக வாழ் தமிழர்கள் கண்டனக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஐ.நா. உள்ளிட்ட அமைப்புக்களும் இலங்கையின் போர் வெறியைக் கண்டிக்கின்றன.


கோத்தபாய


ஆனால் இதற்கெல்லாம் கொஞ்சமும் செவிசாய்க்காத இலங்கை அரசோ கடந்த 4ஆம் திகதி சுதந்திர தினக் கொண்டாட்டங்களை நடத்தி முடித்த பின்னர் பேபர் நடவடிக்கைகளைக் குரூரமாக நடத்தத் திட்டமிட்டிருக்கிறதாம். அதற்காக ராஜபக்ஷ எடுக்கப் போகும் அதிரடித் திட்டங்கள் குறித்து குலை நடுங்கச் சொல்கிறார்கள் இலங்கையின் தமிழ் எம். பி.க்கள் பலரும்.

### இலங்கையில் எமர்ஜென்ஸி!

பன்னாட்டு இராணுவ உதவிகளுடன் இலங்கை அரசு தீவிரமான தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் வல்லிப்புனம் ,சுதந்திரபுரம், மூங்கிலாறு, உடையார்கட்டு உள்ளிட்ட தமிழர் வாழ் பகுதிகளில் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி தமிழர்களை உயிர்பயத்தோடு ஓட வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் புலிகளைப் பூண்டோடு அழிக்க தமிழர் வாழ் பகுதிகள் இடைஞ்சலாக இருப்பதால் இராணுவத்தின் கோபம் , குரூரமாகி விட்டது. இஸ்ரேல், சீனா உள்ளிட்ட நாடுகளின் உதவியோடு போர்களில் பயன்படுத்தக்கூடாத ஆயுதங்களை எல்லாம் கொண்டுவந்து குவித்திருக்கிறது.

இதற்கிடையில் இராணுவ அதிகாரிகளை அழைத்து அடுத்தகட்டத் தாக்குதல் திட்டங்கள் குறித்துப் பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பேசியிருக்கிறார். திடீரென எமர்ஜென்ஸியை அறிவித்து... எஞ்சியிருக்கும் ஊடங்கள், தூதரகங்களை எல்லாம் முற்றிலுமாக வெளியேற்றிவிட்டு உலகத்தின் பார்வையே படாதபடி இலங்கைத் தீவை இருண்ட கண்டாமாக்கி... கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருக்கிறார் கோத்தபாய ராஜபக்ஷ. அதற்கான ஆரம்பமாகத்தான் நோர்வே, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளின் தூதரங்களை இழுத்து மூட வேண்டியிருக்கும் என அவர் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். முக்கியச் செய்தி சேவைகளை மிரட்டும்படியான அறிக்கையும் வெளியிட்டார்.

அத்தோடு மட்டுமல்லாமல் முல்லைத் தீவில் தற்போது தங்கி இருக்கும் தமிழர்கள் புலிகளிடத்தில் பயிற்சி பெற்றவர்கள். அவர்களைப் பொது மக்களாகக் கருத முடியாது . அதனால் இனியும் எங்களின் தாக்குதல்களைத் தாமதப்படுத்த மாட்டோம் எனக் கூறியிருக்கிறார். எமர்ஜென்ஸி அறிவித்து ஒரு வார காலத்துக்குள்


அட்டைப் படம்

**தமிழகத்திலிருந்து வெளிவரும் ஜூனியர் விகடன் சஞ்சிகையில் 11.02.2009 அன்று வெளிவரவிருக்கும் வெளியீட்டில் இலங்கையில் எமர்ஜென்ஸி எனும் தலைப்பில் வரையப்பட்டிருக்கும் கட்டுரை இங்கு தரப்படுகிறது...**

முல்லைத்தீவை மண்ணோடு மண்ணாக்க வேண்டும் என்பது தான் தற்போது கோத்தபாய வைத்திருக்கும் இறுதித் திட்டம். உலகின் பார்வைக்கே தெரியாமல் அப்பாவி மக்களைக் கொன்று முடித்துவிட்டு புலிகள் மீது எல்லா பழியையும் போட்டுவிட இலங்கை இராணுவத் தரப்பு தயாராக இருக்கிறது என அச்சத்தோடு சொல்கிறார்கள், தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள்.

### திட்டம் வகுப்பதே 'றோ'

இலங்கையின் எமர்ஜென்ஸி திட்டம் குறித்துத் தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவாளர்களிடம் பேசினோம். இப்போதே அங்கு அறிவிக்கப்படாத எமர்ஜென்ஸிதான். இதற்கெல்லாம் முக்கியக் காரணகர்த்தா இந்தியாதான். இலங்கைக்கு வெளிப்படையாக ஆயுத உதவிகளை வழங்கி வரும் இந்திய அரசு , முக்கியமான இராணுவ அதிகாரிகள் மூலமாக புலிகளை அழிக்கும் வியூகங்களையும் வழங்கி வருகிறது. அதிநுட்பமான தாக்குதலை நடத்தக்கூடிய மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்கள் சிங்கள இராணுவத்தோடு கைகோத்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி முடிய இன்னும் சில மாதங்களே இருப்பதால் அதற்குள் புலிகளுக்கு முடிவு கட்டிவிட நினைக்கிறது. இலங்கை அரசு. இதன் பின்னணியில் இந்திய உளவு அமைப்பான றோவின்


சுதந்திரதின வைபவத்தில் படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பங்களிப்பு நிறைய இருக்கிறது. அடுத்தடுத்த திட்டங்களை இலங்கைக்கு வகுத்து கொடுப்பதே றோ அமைப்புதானோ என்கிற சந்தேகமும் எங்களுக்கு இருக்கிறது. என்கிறார்கள் இங்கிருக்கும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் சிலர்.

### காங்கிரஸ் கைங்கரியங்கள்!

விடுதலைப்புலிகளை வீழ்த்துவதில் சிங்கள அரசைக் காட்டிலும் காங்கிரஸ் கட்சித் தலைவியான சோனியாகாந்தி தீவிரமாக இருக்கிறார் என புலிகளுக்கு ஆதரவான இணைய தளங்களில் தொடர்ந்து செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இது குறித்து தீவிர விடுதலைப் புலிகள் ஆதரவுப் பிரமுகர்கள் பேசுவது என்ன தெரியுமா?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் ஜெயிலில் அடைக்கபட்டிருக்கும் நளினியை, பிரியங்கா காந்தி சந்தித்தபோதே ஏதோ நடக்கிறது என்று நினைத்தோம். ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற நளினி , முருகன் ஆகியோரை மன்னித்ததன் மூலமாக தன்னை சாத்வீகப் பெண்மணியாகக் காட்டிக்கொண்டார் சோனியா. ஆனால் தன் கணவர் பிரபாகரனால் கொல்லப்பட்டது குறித்த அவருடைய ஆதங்கமும் கோபமும் கொஞ்சமும் குறையவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. உரிய தருணத்துக்காகக் காத்திருந்து பிரபாகரனை ஒழித்துக் கட்டுவதற்கான


மணிசங்கர் ஐயர்

எல்லா உதவிகளையும் இந்தியா தற்போது அளிக்கிறது. இது குறித்து தனக்கு மிக நம்பகமான பிரணாப் முகர்ஜியையும் ராஜபக்ஷவின் நண்பரான மணிசங்கர் ஐயரையும் கலந்து பேசியிருக்கிறது காங்கிரஸ் மேலிடம். அதன் பின்னர் தான் எதிரிக்கு எதிரி நண்பன் என்பது போல புலிகளை ஒழிக்கத் துடிக்கும் ராஜபக்ஷவுக்கு அனைத்து விதமான உதவிகளையும் இந்தியா வழங்குகிறது.

தமிழகத்தில் உள்ள பல கட்சித் தலைவர்கள் ஆவேசக் குரல் எழுப்பியும் அவற்றை செவிமடுக்காமல் ராடர்கள், டாங்கிகள் என இலங்கை அரசுக்கு உதவி வழங்கப்பட்டு வருவதன் பின்னணியை வேறு என்ன வென்று புரிந்து கொள்வது? என்பதே இவர்களின் கேள்வியாக இருக்கிறது.

### களத்தில் குதிக்கும் பி.ஜே.பி!

இலங்கையில் எமர்ஜென்ஸி கொண்டுவரப் போவதாக வெளிவந்திருக்கும் செய்தி பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களை ஈழத்தின் பக்கமாகத் திருப்பி இருக்கிறது. இது குறித்துப் பேசும் தமிழக பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் சிலர் இலங்கையில் எமர்ஜென்ஸியைக் கொண்டு வருவதன் மூலமாக தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கப்பார்க்கிறது காங்கிரஸ் கட்சி. இன அழிப்புக்கு காங்கிரஸ் கைகொடுக்கும் போக்கை, எங்கள் கட்சி ஒரு போதும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. ராஜீவ் காந்தி கொலை குறித்து சி.பி.ஐ. மூலமாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஜெயின் கமிஷன் ஏற்கெனவே உத்தரவு போட்டிருக்கிறது. அதனை விரைவாகச் செயல்படுத்தி கொலைக் காரணம் குறித்து அறிந்திருக்கவேண்டிய காங்கிரஸ் அரசு ஐந்தாண்டு காலமாக அமைதி காத்துவிட்டு ஆட்சி முடிகிற தருணத்தில் ராஜீவ் படுகொலைக்கான பழிவாங்கலை சமயம் பார்த்து தற்போது நிறைவேற்றிக்கொள்ள முயல்கிறது.

இலங்கையில் யுத்தம் மிக மோசமான நிலையை எட்டியுள்ள சூழலில் எங்களின் தேசியத் தலைவர்களான அத்வானி , நரேந்திர மோடி ஆகியோர் இந்தியாவின் முக்கியமான சில மாநில முதல்வர்களை ஒன்றுகூட்டி இலங்கை நிலவரம் குறித்து விவாதிக்கும் யோசனையில் இருக்கிறார்கள். காங்கிரஸ் அரசின் கபட நாடகங்களை அம்பலமாக்குவதற்கு இந்திய அளவிலான ஒரு கூட்டமைப்பை பி.ஜே.பி.யின் பெரிய தலைவர்கள் விரைவில் உருவாக்கப் போகிறார்கள் என்கிறார்கள்.

இதற்கிடையில் தங்களுக்கு ஆதரவு திரட்டும் நோக்கோடு வெளிநாடுகளில் பயணித்துக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் எம்.பிக்களை அவசர அவசரமாக இலங்கைக்குத் திரும்பி வரும்படி கேட்டுக்கொண்டிருக்கிறதாம் புலிகள் தரப்பு.

### பிரபாகரனைஒப்படையுங்கள்!

காங்கிரஸ் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் மணிசங்கர் ஐயரிடம் கேட்டோம். இலங்கையில் வாழும் தமிழர்களின் அடிப்படை உரி மைகளுக்காகவும் அரசியல் உரிமை களுக்காகவும் பெரிய அளவில் சிரத்தை எடுத்து ராஜீவ் -ஜெயவர்த்தன ஒப் பந்ததைக் கொண்டு வந்தார் ராஜீவ். அவர்களின் விடிவுக்கு காங்கிரஸ் துணை நின்ற அளவுக்கு வேறு எந்த அரசும் நின்றதில்லை. இப்போதும் அமைச்சர் பிரணாப் முகர்ஜி மூலமாக இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு பாதிப்புகள் ஏற்படாதபடி காங்கிரஸ் அரசு தானே கவனித்துக் கொண்டிருக்கிறது.


நளினி

இதில் தனிப்பட்ட கோபதாபத்தைக் காட்டவேண்டிய அவசியம் எங்களுக்கு எங்கிருந்து வந்தது?ராஜிவ் கொலைக்கு காரணமான பிரபாகரனை இலங்கை அரசு பிடித்தால் உயிரோடு எங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று தான் எங்கள் அரசு சொல்லி இருக்கிறதே தவிர பிரபாகரனைப் பிடிக்கிற வேலையை சிங்கள அரசுக்கு உத்தரவாகப் போடவில்லை.நளினியை, பிரியங்கா காந்தி சந்தித்தது பற்றியோ நளினியிடம் விசாரிக்கப்பட்ட விவரங்கள் குறித்தோ எனக்கு எதுவும் தெரியாது.

ஆனால் இலங்கையில் போர் தீவிரம் அடைந்திருப்பதற்கு பின்னால் இந்தியாவின் தூண்டுதல் கிடையவே கிடையாது என்பதை மட்டும் அடித்துச் சொல்ல முடியும் என ஆவேசப்பட்டார் அமைச்சர்.

### எப்படி சமாளிப்பார்கள் புலிகள்?

எமர்ஜென்ஸி மூலம் ஏற்படப்போகும் கடுமையான இருட்டடிப்புகளைப் பற்றி உணர்ந்து வைத்திருக்கும் புலிகள் தரப்பு, உலக வாழ் தமிழர்களின் மூலமாக சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்தைத் திருப்பும் திட்டத்தில் இருக்கி



றது. ஏற்கனவே இலங்கையின் அராஜகங்களை கவனித்துக் கொண்டிருக்கும் ஐ.நா-வும் அமெரிக்காவும் தங்களின் விடிவுக்கு உதவுவார்கள் என்பது புலிகளின் நம்பிக்கை.

எமர்ஜென்ஸி அபாயத்தைத் தடுக்க எல்லா விதங்களிலும் நடவடிக்கை எடுக்கிறோம் அதையும் தாண்டி இலங்கையின் எமர்ஜென்ஸி திட்டம் அரங்கேற்றப்பட்டால், இழப்பு சிங்கள அரசாலும் ஜீரணித்துக்கொள்ள முடியாததாகத்தான் இருக்கும் என்கிறார்கள் புலிகள் தரப்பில்.



Lifeline

# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

# மனித அவலங்களின் மத்தியில் வன்னி

உலக நாடுகளின் பார்வை வன்னியை நோக்கியுள்ளது. அங்குள்ள மக்கள் தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள அரசினால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தினுள் செல்வதும் வெளியேறுவதுமாக உள்ளனர். நிலவி வரும் உணவுத் தட்டுப்பாட்டை ஓரள வேனும் ஈடுகட்ட அடுத்த உணவு வாகனத் தொடரணியை அனுப்புவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முயற்சி மேற்கொள்கின்றது. புதுக் குடியிருப்பு வைத்தியசாலையில் நோயாளிகளின் தேவைகள் அதிகரித்த வண்ணமேயுள்ளன.

வன்னியிலுள்ள நான்கு இலட்சம் மக்களும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவுத் தொடரணியை நம்பி வாழ்கின்றமை நாடு அறிந்த விடயமே. இந்நிலையில் அவர்களுக்கான குடிநீர்த் தேவையையும் நிறைவேற்ற தம்மாலான ஒத்துழைப்பை நல்க முயற்சிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேசவல்ல உயர் அதிகாரியான கோடன் வொய்ஸ் தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக 2ஆயிரத்து 203 பொதுமக்கள் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவிற்கு வந்துள்ளனர். வவுனியாவில் இவர்களுக்கான மீள் கட்டமைப்பிற்காக குடிநீருக்கு நானூறு மில்லியனும் மின்சாரத்திற்காக நூற்று இருபத்தொரு மில்லியனும் தேவைப்படுகிறது. தேக்கங் குளத்திலிருந்து நீரினைப் பெறுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. முகாம்களிலுள்ள மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்ய ஏற்பாடுகள் நடைபெறுவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்தார்.



வன்னியில் மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களினால் இடம்பெயர்ந்து செல்லும் மக்களை படத்தில் காணலாம்.

உலக உணவுத் திட்டம் மூலம் தனிநபர் ஒருவருக்கு ஒரு வார காலத்திற்கான பதினைந்து வகையான உணவுப் பொருட்கள் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக வழங்கப்படும். உப உணவுப் பொருட்களும் எரிபொருட்களும் அரச சாரா நிறுவனங்களின் மூலம் வார அடிப்படையிலேயோ அல்லது மாத அடிப்படையிலேயோ பொதிகளாக வழங்கப்படும் எனவும் வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

முகாம்களில் உள்ளவர்களுக்கு விவசாயம், கைத் தொழில், வேலைவாய்ப்பு எனப் பல பயிற்சி நெறிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தாகவும் அங்குள்ள எழுநூறு மாணவர்களுக்கு எதிர்வரும் வாரம் கல்வி நடவடிக் கைகள் ஆரம்பிக் கப்படும் என்றும் அதேவேளை செட்டிகுளம் வைத்தியசாலை, வவுனியா பொது வைத்திய சாலை என்பன தரம் உயர்த் தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத் தீவிலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் தற்பொழுது அண்ணளவாக ஐநூறு நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களுக்கான உணவுத் தேவை பூர்த்தியாக்கப்படுவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியப் பணிப்பாளர் வரதராஜன் தெரிவித்தார். பெரும்பாலான மரக்கறிகள் ஆயிரம் ரூபாய்க்கும் மேற்பட்ட விலையில் தான் விற்கப்படுகின்றன. மிகவும் சிரமத்திற்கு மத்தியில் தான் அவற்றை நோயாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கின்றார்கள். அவர்களுக்கு தொடர்ந்தும் சிகிச்சை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். வவுனியாவிலோ கொழும்பிலோ இருப்பது போன்ற வசதிகள் இங்கு இல்லை. இருந்தாலும் தொடர்ந்தும் அவர்களுக்குரிய உணவு வழங்கப்படுகின்றது என வரதராஜன் மேலும் தெரிவித்தார்.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

**மீண்டும் வாழ்வோம்**

தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

# “வன்னி மக்கள் மன்னாருக்கும் இடம்பெயர்வர் என எதிர்பார்க்கின்றோம்”

## மன்னார் மாவட்ட அரச அதிபர் நிக்கொலஸ்பிள்ளை

தொடர்ச்சியான இடம்பெயர்வுகளை எதிர் நோக்கி வரும் வன்னி மக்கள் வவுனியாவிற்கு இடம்பெயரும் அதே வேளை மன்னாருக்கும் அதிகளவில் இடம்பெயர்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மன்னாரில் அவர்களை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் அரசு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இடம் பெயர் மக்களுக்கு எவ்வாறான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளவுள்ளது என்பது பற்றி அறிந்து கொள்ளும் நோக்கில் மன்னார் மாவட்ட அரச அதிபர் நிக்கொலஸ்பிள்ளை அவர்களை நேர்கண்டுள்ளோம்.

***வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களைத் தங்கவைப்பதற்கு அடம்பன் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்ன?***

அடம்பன் பிரதேசத்தில் ஆரம்ப நடவடிக்கையாக ஆயிரம் குடும்பங்களைக் குடியமர்த்தலாம் என்று ஒரு இடத்தை நாங்கள் அடையாளப்படுத்தியிருக்கின்றோம்.

அந்தப் பகுதிக்குரிய மின்சாரம், குடிநீர், போக்குவரத்து, சுகாதார சேவைகள் மற்றும் கல்விக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான பதிவுகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம்.

அந்தப் பதிவுகள் குறித்த கலந்துரையாடலினை வருகின்ற வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற இருக்கின்ற கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். அரச சார்பற்ற நிறுவனங்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதால் அவர்களிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்க்கின்றோம்.


***மன்னார் மாவட்டத்தில் சிறுகண்டல், வண்ணாமோட்டை, நானாட்டான் ரைஸ்மில், களிமோட்டை போன்ற பகுதிகளிலும் இடம் பெயர் ந்தவர்கள் உள்ளனர். அந்த நலன் புரி முகாம்களுக்கும் புதிதாக அமைக்கப் படவுள்ள அடம்பன் முகாமிற்கும் இடையேயான தொடர்பு என்ன?***

இங்கிருக்கின்ற மக்களுக்கும் ஏற்கனவே முகாம்களில் இருக்கின்ற மக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மன்னாரைச் சேர்ந்த கிட்டத்தட்ட 20 ஆயிரம் மக்கள் இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அந்த மக்களைத் தான் அடம்பன் பகுதிக்கு அனுப்பி அவர்களுக்குரிய ஆரம்ப வசதிகளை நாங்கள் செய்து கொடுக்கவுள்ளோம்.

> **UN ஸ்தாபனங்களுக்கும் ICRC ஸ்தாபனங்களுக்கும் கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படுகின்ற பாரிய ஸ்தாபனங்களுக்கும் முகாம்களுக்கு சென்று மக்களுக்கு சேவை புரிவதில் அவ்வளவாக பிரச்சினைகள் இல்லை.**

***நீங்கள் தெரிவு செய்த இடமானது இடம் பெயர்ந்தவர்களுக்கு எந்த வகையில் அனுகூலமாக இருக்கும்?***

அடம்பன் பகுதி முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற பகுதி. மக்கள் அங்கு இல்லை. இருந்தாலும் இராணுவம் அப்பகுதி பொருத்தமானது என்று ஆலோசனை கூறியிருப்பதால், அங்கு அவர்களை அமர்த்தவுள்ளோம். அதேவேளை அதனால் வேறு சில நன்மைகளும் உள்ளது. அங்கு கொண்டு செல்லப்படுகின்ற மக்கள் அநேகமாக அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்று தான் நாங்கள் எதிர் பார்க்கின்றோம்.



மன்னார் மாவட்ட அரச அதிபர் நிக்கொலஸ்பிள்ளை

***மன்னாரிலுள்ள நலன்புரி நிலையங்களில் சேவையாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஏதேனும் கட்டுப்பாடுகள் உள்ளனவா?***

அரசசார்பற்ற நிறுவனங்கள் எமக்கு தொடர்ச்சியான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. குறிப்பாக UN ஸ்தாபனங்களுக்கும், ICRC ஸ்தாப னங்களுக்கும்; கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படுகின்ற பாரிய ஸ்தாபனங்களுக்கும் முகாம்களுக்கு சென்று மக்களுக்கு சேவை புரிவதில் அவ்வளவாக பிரச்சினைகள் இல்லை என்று சொல்லப் படுகின்றது. ஏனையவர்கள் தாங்கள் எந்தக் கால கட்டத்தில் என்ன சேவைகளைச் செய்யப் போகின்றார்கள் என்ற விடயத்தை தெரிவித்து பாதுகாப்பு அமைச் சின் அனுமதியைப் பெற்று தமது பணியைத் தொடரலாம்.

## சுவடுகள்

⌘ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 159 ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 17ஆயிரத்து 258 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 162 பேர் (வன்னி நீங்கலாக) அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

⌘ வடமராட்சி கிழக்கு மற்றும் பளை பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்த இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் யாழ் குடாநாட்டிலுள்ள கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை, குரு நகர் பழைய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி மற்றும் மிருசுவில் கத்தோலிக்க தேவாலயம் என்பவற்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மிருசுவிலில் தங்கியுள்ள மக்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500இனைத் தாண்டியுள்ள நிலையில் அவர்களை கொடிகாமத்தில் குடியமர்த்துவதற்கான நடிக்கைகளை பிரதேச செயலக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக் கிழமை களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநூர் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews. lk.Radio. Voices of peace.lk) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

**மீண்டும் வாழ்வோம்**

''மீண்டும் வாழ்வோம்'' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ள வர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனி தாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

இறைவனை நோக்கி ஒருவன் ஓரடி நடந்தால் இறைவன் அவனை நோக்கி ஓடி வருகிறான்.

~ இஸ்ரேல்

வலம்புரி

## வன்னி மக்களுக்காக இறைவனைப் பிரார்த்திப்போம்

வன்னியில் போர் உக்கிரம் அடைந்துள்ளது. தங்கள் உயிரைக் காப்பாற்ற முடியாது மக்கள் ஓலமிடுகின்றனர்.

இந்த வேளையில் தமிழகத்திலிருக்கும் எங்கள் இரத்த உறவுகள் தங்கள் உணர்வுகளை பலவாறு காட்டி வருகின்றனர்.

இதற்கு மேலாக ஐ.நா. செயலாளர், பரிசுத்த பாப்பரசர் எனப் பலரும் யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை அரசிடம் கேட்கின்றனர்.

காலம் கலியுகம் என்பதால் யுத்தத்தை நடத்தி முடிப்பதென அரசு கங்கணம் கட்டி நிற்கிறது.

எத்தனையோ பேர் எடுத்துக் கூறியும் வன்னிப் போர் நின்றபாடில்லை. அங்கு அகப்பட்டு பல மாதங்களாக தாங்க முடியாத வேதனைகளைச் சுமந்துகொண்டு ஆற்றலையும் அந்த மக்களுக்கு விடிவும் கிடைக்கவில்லை.

அதேநேரம் யாழ்.குடாநாட்டில் இருக்கும் ஒவ்வொரு உள்ளங்களும் தங்களுக்குள் குமுறிக்கொண்டே இருக்கின்றனர்.

நாம் என்ன செய்ய முடியும் என்பது இவர்களின் உள்ளத்தில் ஒலிக்கும் கேள்வி.

இந்தக் கேள்விகளின் மத்தியில் யுத்தத்தின் உக்கிரத்தில் எமக்கு அப்பாற்பட்ட இறைசக்தியைப் பற்றி நினைப்பதே பொருத்துடையதாகும்.

இந்தப் பிரபஞ்சத்தின் படைப்பு, அசைவு யாவற்றுக்கும் இறைவனே மூலகாரணம்.

அவன் அசைவின்றி அணுவும் அசையாது என்பது எம் முன்னோர்கள் தம் அனுபவத்தில் கண்ட மெய்ப்பொருள்.

அந்த மெய்ப்பொருளை உணர்ந்து இறைவா! வன்னியில் அல்லற்படும் எங்கள் மக்களை காப்பாற்று. அவர்களின் துன்பத்தை நீக்க உன் திருவருள் சக்தியை தந்தருள் என வேண்டுவதே நாம் செய்யக் கூடிய மிக உயர்ந்ததும் ஆபத்தில்லாததுமான வழியாகும்.

இறைவனைப் பிரார்த்தனை செய்வதன் மூலம் எங்கள் உறவுகளை மரண அபாயத்திலிருந்து காப்பாற்ற முடியும்.

'படைக்கலமாக உன் நாமத்து ஐந்தெழுத்தும்' என்று திருவருள் சக்தி மிக்க நம் ஞானியர் கூறியதை சிந்தித்து இறைவனை வழிபடுவோம்.

ஆடம்பர நிகழ்வுகளை, கொண்டாட்டங்களை இறை பிரார்த்தனைக்காக ஒதுக்குவோம். இந்து ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிகள் எங்கும் அல்லற்படும் மக்களுக்காக பிரார்த்தனை ஒலிக்கட்டும்.

வேதமந்திரங்கள் முழங்கட்டும். அந்தணர்கள் யாகங்கள் நடத்தட்டும். எங்கள் இறை நம்பிக்கை நிச்சயம் பதில் தரும்.

எங்கே வாருங்கள் இறை வழிபாட்டுக்கு.

# பிரபஞ்ச தோற்ற வெளிப்பாடே தைப்பூச விழா



(சிங்கப்பூர்)

கோள்களிலே சிறப்பு மிகு குரு - நட்சத்திரங்களில் பெருமை மிகு பூசம் - மாதங்களிலே மாட்சிமை மிக்க தை. இம்மூன்று சிறப்புகளும் அமையப்பெற்ற அற்புதமான உன்னத உயரிய நிலையைப் பெற்ற விழாவே தைப்பூசத் திருநாளாகும்.

உத்திராயணன காலத்தின் முதல் திங்களாம் தைத் திங்கள் முழு நிலவில் முகிழ்க்கும் தன்னிகரில்லாத தனி விழாவே தைப்பூசம். தன்னிலே தானாய் இருந்த பிரபஞ்சம் தன் நினைவு தோன்றி நினைவே அசைவாய் அந்த அசைவே ஓங்காரமாய் அந்த ஓங்காரமே பரஞ்ஜோதியாய் ஆன நாளே தைப்பூசத் திருநாள். அப்பரம்பொருளே அமிழ்ந்து இமிழ்ந்து உழிந்நது அழகாய் அருட்பெருஞ் ஜோதியாய் வெளிப்படுத்திக் கொண்ட நாளைத் தைப்பூசத் திருநாளாய் நாம் கொண்டாடுகிறோம்.

பிரபஞ்சம் அழகாகத் தோன்றிய நன்நாளே முருகன் தோன்றிய திருநாள். முருகு என்றாலே அழகு. எனவே அழகு தோன்றிய நாள். பரிசுத்தமான ஆத்மா தன்னிலிருந்து தோன்றுகிற பொழுது அன்பாய், அறிவாய், ஆற்றலாய், அழகாய், ஆனந்தமாய் தோன்றுகிறது.அந்த ஆத்மாவின் அழகு நிலை, அறிவு நிலை, ஆற்றல் நிலையே முருகு நிலை. அனைத்தையும் அழிக்க வல்லது.

முக்குணங்களையும் அழிக்க வல்லது ஞானம். ஆகவே தான் முருகன் எப்போதும் தன் கரங்களிலே ஞானவேலை வைத்திருக்கிறார். அசுரகுணங்களை அழிக்க வல்லது ஞானம். எனவே தான் அசுரர்களை அழிக்கத் தன் அன்னை பராசக்தி தம் சக்திகளையெல்லாம் ஒருங்கிணைத்து ஞான வேலை முருகப் பெருமானுக்கு தைப்பூச நன்னாளில் வழங்கியதாக கூறப்பட்டது.

முருகன் தோன்றியதும் தைப்பூசத் திருநாளில் முருகனுக்கு ஞானவேலை வழங்கியதும் இத்திருநாளில். முருகப் பெருமான் சக்தியாகிய வள்ளியை மணம் புரிந்ததும் தைப்பூசத் திருநாளிலேயே.

பிரபஞ்சத்தின் உண்மையை வெளிப் படுத்தவே இத்தைப் பூசத் திருநாளை கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த மனித இனமான தமிழ் இனம் இந்த இயற்கையையே - பிரபஞ்சத் தோற்ற வெளிப்பாட்டையே திருவிழாவாகக் கொண்டாடுகிறோம்.

சிவபெருமான் நெற்றிக் கண்களிலிருந்து உதித்த முருகப் பெருமான், ஆறு தீப்பொறிகளே ஆறு உருவங்களாய், ஆறு முகங்களாய்த் தோன்றி, அந்த ஆறு முகங்களின் மூலமாகவே சிவன் தம்மைப் போலவே தம் குமாரனையும் வெளிப்படுத்துகிறார்.

பஞ்ச பூதங்களாய் அதுவே அறிவாய் - விண்ணாய் - காற்றாய் - நெருப்பாய் - நீராய் - நிலனாய்ப் பரிணமித்தது. ஆகவே முருகப் பெருமானையும் ஞான வேலையும் வணங்கி வந்தால் எல்லா நன்மைகளும் வந்தடையும். தைப் பூசத்திருநாளில் முருகப் பெருமானை தரிசனம் செய்வதால் உடலுக்கு ஆரோக்கியமும் உள்ளத்திற்கு அமைதியும் அறிவுக்குத் தெளிவும் நிறை செல்வமும் மெய்ஞானமும் நிறை வாழ்வும் நீள் ஆயுளும் பெறலாம்.

இந்த நல்ல நாளில் உண்மையின் உண்மையை உணர்ந்து இறையருளினால் எல்லாரையும் வாழ்வித்து வாழப் பரிபூரண நல்லாசிகள். எல்லாரும் எல்லாம் பெற்று இன்புற்று வாழ்க. வையகம் சாந்தியும் சமாதானமும் சந்தோஷமும் அடைக.

**ஜெகத்குரு மகா மகரிஷி பரஞ்ஜோதியார்**

## இந்து மாமன்றத்தின் வேண்டுகோள்

இம்மாதம் 23 ஆம் திகதியன்று வரும் முக்கிய விரத தினமான "மகா சிவராத்திரி"யை இந்து மக்கள் அனைவரும் நாட்டிலுள்ள இந்து ஆலயங்களில் பூசை, வழிபாடுகளுடன் இடையூறு எதுவுமின்றி அனுஷ்டிப்பதற்கு வழிவகுக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதியையும் பொலிஸ்மா அதிபரையும் கேட்டுள்ளது.

இது தொடர்பாக மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் இம்மாதம் 5 ஆம் திகதியன்று அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதத்தில், அன்றைய தினம் இரவு பக்தர்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்து கொள்வதற்கு வசதியாக ஊரடங்குச் சட்டத்தை (எவ்விடத்திலும்) தளர்த்தும்படியும், அன்றைய தினம் மேலதிக போக்குவரத்து வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் படியும் கேட்டிருக்கிறார்.

சிவராத்திரி தினத்தன்று பகலும், இரவும் ஆலயத்தின் உள்ளேயும், வெளியேயும் ஒலிபெருக்கி பாவிப்பதற்கான விசேட அனுமதியையும் வழங்கும்படி மாமன்றப் பொதுச் செயலாளர் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிவைத்துள் அவசரக் கடிதத்தில் கேட்டுள்ளார். (ஓ)

## வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்த 12 பேர் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்

(வவுனியா)

வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களில் 5 பெண்கள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்பு தலைமை அலுவல கத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களாக வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களில் பலர் கடுமையான விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் அதன் போதே 12 பேரும் கைது செய்யப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை வவுனியா நெலுக்குளம் படை முகாமில் 25 பெண்கள் உட்பட 95 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் அனைவரும் வன்னியில் இருந்து நோயாளர்களுடன் சர்வதேச செஞ் சிலுவைச் சங்க பிரதிநிதிகளின் பாதுகாப்பில் வவுனியாவுக்கு சென்ற போதே ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து கைது செய் யப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின் றனர்.

இது தொடர்பாக வவுனியாவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (எ-1)

# நற்செய்தி? நற்செய்திப் பணி? நற்செய்தியாளன்?

நற்செய்தி என்பது என்ன? நல்ல காலம் பொறக்குது... நல்லகாலம் பிறக்குது... என்னும் குடுகுடுப்பைக்காரனின் சொற்கள் ஒருவனுக்கு ஒரு புதுச் செய்தியைக் கொடுக்கிறது. அதுதான் ஒருவனுக்கு நல்ல செய்தி.

அதாவது, "ஒரு மனிதனுக்கு புத்துணர்ச்சியையும், நம்பிக்கையையும், புதுச் சிந்தனைகளையும், புதுபார்வையையும், புது வாழ்வையும் தருகின்ற நல்ல சொற்கள் தான் நற்செய்தி" அதே வேளை யிலே நற்செய்தி வாசகத்தில் வரும் நல்ல செய்தி என்ன?

எல்லா மக்களுக்கும் இறை செய்தி, எல்லா மக்களுக்கும் மீட்பு, எல்லா மக்களுக்கும் நோய், பேய் இவைகளினின்று

## பரமபிதா காட்டிய பாதை

குணம், இந்த நல்ல செய்திதான் இன்றைய நற்செய்தி வாசகத்தில் விரவிக் கிடக்கின்றது.


நற்செய்திப் பணி என்பது என்ன? நற்செய்திப் பணி என்பது இயேசுவின் பணி. இயேசுவின் பணி என்பது மீட்புப் பணி, விடுதலைப்பணி, நீதிப்பணி, மீட்புப் பணி என்பது தனி மனித மீட்பு, சமூக மீட்பு என இரண்டு வகைப்படும்.

தனிமனித மீட்பு என்பது தனிமனித தவறுகள், பாவங்கள், குறைகள் இவைகளினின்று மீட்பு. விடுதலைப் பணி என்பதும் இரண்டு வகைப்படும்.

தனிமனித அடிமைத்தனங்களாகிய குடி, காமம், இச்சை, புகழ், பெருமை இவைகளினின்று விடுதலை என்பது தனி மனித விடுதலை. வரதட்சனை, குழந்தைத் தொழில், பெண்ணடிமைத்தனம் போன்ற அடிமைத்தனங்களினின்று விடுவிப்பது சமூக விடுதலை.

நீதிப்பணி என்பதும் தனி மனித நீதி, சமூக நீதி என இரு வகைப்படும். தனி மனிதனுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, இருப்பிடம் இவைகளைக் கிடைக்கச் செய்வதும், தனிமனித நீதி, மறுக்கப்பட்ட மனித நேயத்தையும், நொறுக்கப்பட்ட மனித மாண்பையும் மீண்டும் பெற்றுக் கொடுப்பது சமூகநீதி.

இத்தகைய பணிகளைத்தான் இயேசு செய்து வந்தார் என்பது இன்றைய நற்செய்தி வாசகத்தின் மையச் செய்தியாகும்.



நற்செய்தியாளன் யார்?

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவனும் ஒரு இறை நற்செய்தியாளன் தான். இந்த நற்செய்தியாளனின் நிலை என்ன என்றால், பவுலடியார் கூறுவதுபோல "நற்செய்தி அறிவிப்பவரின் மலரடிகள் எத்துணை அழகானவை" என்பதாகும்.

இந்த நற்செய்தியாளன் இப்பணிக்காக தன்னையே அடிமையாக்கி, வெறுமையில் வெறுமையாகி, எல்லா ருக்கும் எல்லாமுமாக வேண்டும் என்பதாகும்.

அதாவது, மக்களுடைய உணர்வுகளில், தேடல்களில், தேவைகளில் இரண்டற கலப்பவனே உண்மையான நற்செய்தியாளன்.

பிறருடைய தவறுகளை, குற்றங்களை அப்போதே மன்னித்து மறந்து விடுவதுதான் உண்மையான குணமளிக்கும் நற்செய்திப் பணி. மன்னிப்பதோடு நின்று விடாமல் அன்பு செய்யவும் வேண்டும்.

இதைச் செய்ய புறப்படுவோமா? மறந்து விட வேண்டாம், நற்செய்திப் பணி என்பது நம்மேல் சுமத்தப்பட்ட கடமை!

***ஜோன் றொபேர்ட்.***

## இணுவைச் சித்தர் பெரிய சந்நியாசியாரின்

# அகக் கண்ணில் ஆண்டவனின் அருளால் உணர்த்தப்பட்ட இணுவைத் திருமஞ்சம்

### இன்று தைப்பூசத் தினத்தில் இணுவை கந்தப் பெருமான் சந்நிதியில் திருமஞ்சப் பவனி

இணுவைக் கந்தப் பெருமானுக்கென சித்தர் இணுவைப் பெரிய சந்நியாசியாரால் உருவாக்கப்பட்டதே இத்திருமஞ்சம். அன்னாரது காலம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும்.

இத்தகைய மஞ்சம் ஒன்று இதற்கு முன்பும் இருந்ததில்லை. இனியும் உருவாகப் போவதில்லை என்பது ஆய்வாளர்கள் கருத்து. முருகப்பெருமானுக்கே உரிய நூலாகிய குமாரதந்திரத்தின் சாஸ்திர அமைப்பிற்கிணங்க உருவாக்கப்பட்டுள்ளது இத் திரு மஞ்சம் என்பது அறிஞர்களின் கூற்று.

சைவ உலகில் மஞ்சம் என்னும் அமைப்பு முதல் முதலில் உருவாகியது இணுவைக் கந்தப்பெருமானுக்கே எனவும் மஞ்சம் என்னும் அமைப்பை முதல் முதலாக சைவ உலகிற்கு தந்தவர் இணுவைச் சித்தர் பெரிய சந்நியாசியாரே எனவும் சிவத்தமிழ்ச்செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இவ் ஆலயத்தின் மஞ்ச உற்சவத்தின் போது தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

பெரிய சந்நியாசியாரால் 1910ஆம் ஆண்டு தனது இருப்பிடமாகிய இணுவில் கிழக்கு மஞ்சத்தடியில் ஆரம்பிக்கப்பட்ட இம் மஞ்சத் திருப்பணி இரண்டு வருடங்களில் நிறைவு பெற்று 1912ஆம் ஆண்டு இணுவைக் கந்தன் ஆலயத்தில் வெள்ளோட்டம் கண்டது. இணுவில் கிழக்கிலே மஞ்சம் உருவாக்கப்பட்ட இடம் மஞ்சத்தடி என்னும் காரணப் பெயர் கொண்டு இன்றும் அழைக்கப்படுகின்றது. அவ்விடத்தில் அன்னாரது சமாதிக்கோயிலான அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் அமைந்துள்ளது.

அகக்கண்ணிலே ஆண்டவனின் அருளால் உணர்த்தப்பட்ட திருமஞ்சத்தின் தோற்றத்தை அடியவர்கள் யாவரும் காண வேண்டும் என்னும், பெருநோக்கம் கொண்ட சித்தர் ***யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*** எனும் கருத்திற்கிணங்க திரு மஞ்சத்தை புற உருவில் அமைக்க ஆர்வம் கொண்டார்.

ஆண்டவனின் அருளாசியுடன் தனது திருப்பணியை ஆரம்பித்தார். அடியவர்கள் உதவியுடன் தேவையான மரங்களை பல இடங்களிலும் தெரிவு செய்து தறித்தார்.

மஞ்சத்தினை உருவாக்குவதற்கு ஏற்ற சிற்பாசிரியர்களை தேட முற்பட்ட போது எம் பெருமான் அடியவரின் கனவில் தோன்றி மஞ்சம் செய்வதற்கு ஏற்ற தொழிலாளர்கள் ஊர்காவற்றுறை துறைமுகத்தை குறித்த நாளில் வந்தடைவார்கள். அவர்களை அழைத்துவா எனத் தெரிவித்தார்.


சொப்பனத்திலே ஆண்டவன் கூறிய குறித்த நாளில் சந்நியாசிரியார் ஊர்காவற்றுறை இறங்கு துறையை அடைந்தார். தென்னிந்தியாவில் நின்றும் நாவாய் மூலமாக ஆசாரியர்கள், சிற்பத்தொழிலாளர்கள் என ஒரு தொகுதி மக்கள் கூட்டம் இறங்குதுறையில் வந்து இறங்கி நிற்பதைக் கண்டார். அடியவரைக்கண்ட மக்கள் கூட்டத்தினர் பெரியவரே தாங்கள் தானே எமது இல்லம் வந்து இன்றைய தினத்தில் இங்கு வரும்படி கூறியதற்கு இணங்க நாங்கள் இங்கு வந்துள்ளோம் எனத் தெரிவித்து நின்றனர்.

சந்நியாசியார் வியந்தார் ***என்ன இணுவில் கந்தன் ஆலயத்தை விட்டு நான் எங்கேயும் செல்லவில்லையே*** இது கந்தப் பெருமானின் திருவிளையாடலே என எண்ணி உள்ளம் உவகை கொண்டார்.

அங்கே காணப்படும் சிற்ப அமைப்புக்களை எமது ஊனக் கண்களால் பார்த்து பூர்த்தியாக்குவதற்கு எமது வாழ்நாள் போதாது என்னும் உண்மை இத் திருமஞ்சத்தின் முன் நின்று நோக்கும் போது தான் தெரியும். உண்மையில் கூறப்போனால் ஓர் சிறு குருவி தனது இறக்கையால் மண்ணை ஒற்றி ஒரு பெரிய சமுத்திரத்தை மூடுவதற்கு முற்படுவது போன்ற பிரமையே எமக்கு ஏற்படும். நுணுக்கமான சிறு சிறு சிற்பங்கள் எண்ணில் அடங்காதவை .

கண்ணுக்குத் தெரியும் கந்தர்வ சிற்பங்களை விட ஒவ்வோர் மாடங்களும் தன்னகத்தே கொண்டுள்ள சிறு சிறு சிற்பங்கள் ஏராளம். இவை தரையில் நின்று பார்த்தால் கண்ணுக்குப் புலப்பட மாட்ட. தேவலோகத்திற்குரியவையாக வேதங்களில் கூறப்பட்ட பல தரப்பட்ட பறவைகள், மிருகங்கள், ஊர்வன போன்ற அமைப்புகளை இங்கே காணலாம். மனித வாழ்வியல் பற்றிய பல தத்துவங்களையும் மனிதனது சுக போகங்களின் தன்மை பற்றிய சிற்ப அமைப்புக்களையும் இங்கே காணலாம்.

ஓர் மனிதன் கருவுற்ற காலம் முதல் பூமியில் பிறந்து பல பருவங்களையும் கடந்து அவன் இவ்வுலக வாழ்வில் நின்றும் நீங்கும் வரையிலான உலகியல் தன்மைகளை பல கோணங்களில் நோக்கி சிற்பமாக வடித்துள்ளார். அது மட்டுமல்லாது இந்து சமயத்தின் பிரிவு களாகக்கூறப்பட்ட சைவம், வைணவம், சாத் தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் ஆகிய ஆறு வகைச் சமயங்களின் முதல் தெய்வங்களின் வரலாறுகளைக்கூறும் தெய்வ சிற்பங்களையும் இங்கே காணலாம். இந்தியாவில் பிரசித்தி பெற்ற ஆலயங்களின் கருவறைகளுக்கு மட்டுமே உரியவை எனக் கருதப்படும் திருவுருவங்கள் பலவும் இம் மஞ்சத்திலே செதுக்கப்பட்டுள்ளது. இதற்கு இணங்க மூலஸ்தானத்திலே உமையம்மையின் பெரிய தேற்றத்திற்கு அருகே முழந்தாளுக்கு கீழான உயரம் கொண்ட பாலமுருகன் நிற்பதாக கருவறை மூர்த்தி உருவாக்கப்பட்டுள்ளது.




சிங்கார வேலவர் சந்நிதிக்கே உரிய இவ் விக்கிரகம் இவ் ஆலயம் தவிர வேறு எங்கேயும் காணமுடியாது ஆனால் இச் சிங்கார வேலவ திருவுருவம் இத் திருமஞ்சத்திலே செதுக்கப்பட்டுள்ளது. இது போன்று பல சிற்ப அமைப்புக்களைத் திருமஞ்சம் தாங்கி நிற்கிறது . இவற்றையெல்லாம் தனித்தனியே ஆய்வு செய்து எழுதுவதற்கு குறுமுனி காவேரி ஆற்றை தனது கமண்டலத்தில் அடைத்து வைத்திருப்பதற்கு பெற்ற ஆற்றலை நாமும் பெற்றிருந்தாலே முடியும். வருடத்தில் இரு முறை இணுவில் கந்தப் பெருமானை தன்னகத்தே தாங்கி அருட்பவனி வருகிறது. இத்திருமஞ்சத்தில் பவனிவரும் ஆறுமுகப் பெருமான் திருவுருவோ அதி அற்புத திருக்கோலம் கொண்டது.

காலமாற்றத்தால் சிறிது காலம் உலாவராது தரித்து நின்ற இத்திருமஞ்சம் தற்போது புதுப்பொலிவு பெற்று உலா வருகின்றது. மஞ்சம் வீதி உலா வராது நிறுத்தி வைக்கப்பட்ட 30 வருட காலமே சைவ மக்கள் மனதில் நின்றும் இத்திருமஞ்சம் மறைபொருளாகத்திகழ்வதற்கு ஏதுவானது எனலாம்.

**இணுவை மா. ந. பரமேஸ்வரன்**

தற்போது இத் திருமஞ்சக் காட்சி திரும்பவும் 25 வருட காலமாக தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இணுவைக் கந்தப்பெருமான் சந்நிதியில் தைப்பூசத் தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை இவ் அழகிய திருமஞ்சப்பவனியைக் காணலாம்.


**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**

**ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்**

**நன்றி நவிலலும்**

**அமரர் தம்பையா மயில்வாகனம்**



அன்னை மடியில் 04 ✠ 10 ✠ 1926



அம்பிகை அடியில் 10 ✠ 01 ✠ 2009

பெற்றோரின் வழி நின்று பெருமையுடன் வாழ்ந்தீரையா
உற்றாரைப் பேணுவதில் உறவுகளுக்கு உதவுவதில்
நற்றாயைப் போலிருந்தீர் நாளெல்லாம் மகிழ்ந்திருந்த
பொற்றாலியாள் புலம்பியழப் போனதென்ன மாயமையா
புண்ணியம் பலவும் செய்து எமைப்புகழுடனே வாழவைத்தீர்
எண்ணிய கருமம் யாவும் இனிதே நீர் இயக்கி வைத்தீர்
கண்ணியமாக எம்மைக் கலங்காமல் காத்து நின்றீர்
நண்ணிய தெங்கே ஐயா! நாள்தோறும் கலங்குகின்றோம்.
வித்துவனாய் மருத்துவத்தில் விளங்கிய நின்திறமை கண்டு
எத்தனைபேர் உன்னிடத்தில் இன்புற்று வாழ்ந்தார்கள்
முத்தனைய பெறுமதியாய் முடிந்தாலும் உன் ஆயுள்
நித்தியமாய் வாழ்வீர் ஐயா நிம்மதியாய் நீர் உறங்கும்.
மூண்டுவிட்ட பெருந்துன்பம் முடிவில்லாத் துன்பமையா
ஆண்டுபல சென்றாலும் ஐயா நாம் உமைமறவோம்
மாண்டுவிட்டால் மீண்டு வரும் மறு பிறப்பு இல்லாமல்
வேண்டுகின்றோம் அம்பாளின் அடி நிழலில் சாந்திபெற
துன்பத்தில் பங்கு கொண்டு துயர்பகிர்ந்த யாவருக்கும்
அன்புடனே ஓடிவந்து அனைத்துதவி செய்தவர்க்கும்
இன்பமுடன் அவராத்மா சாந்தி பெற இறைஞ்சியோர்க்கும்
என்புருக எம் நன்றி என்றென்றும் நல்குகின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கடந்த 10.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் தம்பையா மயில்வாகனம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.02.2009) திங்கட்கிழமை காலை கங்காதரணி தீர்த்தக் கரையிலும் அதனைத் தொடர்ந்து வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*உஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

*நீங்கா நினைவுகளுடன்*
*மனைவி, மக்கள், மருமக்கள்,*
*குழந்தைகள், குடும்பத்தினர்.*



சுன்னாகம்- மயிலணி, திருக்குடவாயில்
ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில்
ஆதீன கர்த்தரும் பிரதம குருவுமாக விளங்கிய

**அமரர் சிவஸ்ரீ சோ. சோமாஸ்கந்தக் குருக்கள்**

*அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பெறும்*

**ஆபஸ்தம்ப சிராத்தப் பிரயோகம்**

**நூல் அறிமுக விழா**

**காலம்:–** தை மாதம் 27ஆம் நாள் (09.02.2009) திங்கட்கிழமை
**நேரம்:–** பிற்பகல் 2 மணி
**இடம்:–** மயிலணி சிவன் ஆலய மண்டபம்

*அந்தணப் பெருமக்கள் அனைவரும் வருகை தந்து நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

நன்றி.

குடவாயிற் கோட்டம்,
மயிலணி, சுன்னாகம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(2234)



# ஏகா தச ருத்திர மஹா யாகம்



வடமராட்சி பருத்தித்துறை முதல்வி அம்மன் திருக்கோயிலில் நாளை (09.02.2009) திங்கட்கிழமை காலை 6 மணி முதல் 12 மணி வரை ஏகா தச ருத்திர மஹா யாகம் நடைபெறும் அனைவரும் வருக.

*பிரதம குரு*
*பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்*
*சபரிமலை குரு சுவாமி, சட்டநாதர் சிவன் கோயில் பிரதமகுரு*

பருத்தித்துறை.

இங்ஙனம்
ஞானசம்பந்தர் கலை மன்றம்

(2235)

## மூன்றாவது போட்டியில் ஆஸி-நியூ. இன்று பலப்பரீட்சை

அவுஸ்திரேலியா சென்றுள்ள டானியல் விக்டோரி தலைமையிலான நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. பேர்த் மற்றும் மெல்பேர்னில் நடந்த போட்டிகளில் நியூசிலாந்து வெற்றிபெற்று 2:0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இவ்விரு அணிகள் மோதும் மூன்றாவது ஒருநாள் போட்டி இன்று சிட்னி யில் நடக்கிறது. நியூசிலாந்து அணி இப்போட்டியில் வெற்றிபெறும் பட்சத்தில் தொடரை வென்று சாதிக்கலாம். இதேவேளை முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய .அணி தோல்வியடைந்ததும் ஏனைய நான்கு போட்டிகளில் ஓய்வு வழங்கப்பட்ட அணித் தலைவர் பொன்டிங் மீண்டும் இன்றைய போட்டிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதனால் சொந்த மண்ணில் அவுஸ்திரேலிய அணி மோசமான தோல்வியை தவிர்க்க போராடும் என்பதால் இப்போட்டி கிரிக்கெட் ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும்.

# ஹயில், சர்வான் சதம் விளாசல்; மேற்கிந்திய தீவுகள் முன்னிலையில்

(ஜமெய்கா)

அணித்தலைவர் ஹயில்,சர்வான் சதம் அடிக்க மேற்கிந்திய தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணியை விட 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் கடந்த 4ஆம் திகதி ஜமெய்காவில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையு மிழந்து 318 ஓட்டங்களை எடுத்தது. இதில் பீற்றர்சன் 97 ஓட்டங்களையும் பிறிர் 64 ஓட்டங்களையும் பிளின்டொப் 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பென் 4 விக்கெட்டுக்களையும் ரெய்லர் 3 விக்கெட்டுக்களையும் பவல் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் ஹயில் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 160 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி நாஷின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் ஆட்ட நேர முடிவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 352 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியதீவுகள் அணி, இங்கிலாந்து அணியைவிட 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

இதில் சர்வான் 107 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஹயில் 107 ஓட்டங்களையும் நாஷ் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் மற்றும் ராம்டீன் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரோட் 3 விக்கெட்டுக்களையும் பிளின்டொப் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் ஹார்மிசன்,பனீர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர். நான்காம் நாள் ஆட்டம் நேற்று (இலங்கை நேரப்படி இரவு) நடைபெற்றது.

# ஐ.பி.எல். ஏலத்தில் ஆஸி. வீரர்கள் பரிதாபம்

(கோவா)

ஐ.பி.எல். இரண்டாவது தொடருக்கான ஏலத்தில் இங்கிலாந்து வீரர்களுக்குத்தான் அதிக மவுசு காணப்பட்டது. அவுஸ்திரேலிய வீரர்களை வாங்க முன்னணி அணிகள் முன் வரவில்லை. இரண்டாவது ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான வெளிநாட்டு வீரர்கள் ஏலம் முறையில் தேர்வு செய்யப்பட்டனர்.

**விலை போகாத வீரர்கள்**

கோவாவில் உள்ள பனாஜியில் நடந்த ஏலத்தில் இங்கிலாந்தின் பீற்றர்சன்,பிளின்டொப் அதிக தொகைக்கு வாங்கப்பட்டனர். அதேநேரத்தில் சமீப காலமாக சொதப்பிவரும் அவுஸ்திரேலிய அணியின் வீரர்களை வாங்க பெரும்பாலான அணிகள் தயங்கின. ஸ்ருவெர்ட் கிளார்க்,கீவ்ஸ்,மெக்கெய்ன் உள்ளிட்டோரை யாரும் வாங்கவில்லை. இங்கிலாந்தின் சமித் படேல்,பங்களாதேஷின் சகிபுல் ஹசன்,தமிம் இக்பால்,இலங்கையின் குலசேகரா,கபுகெதரா,வீரரத்னே,மேற்கிந்திய தீவுகள் அணியின் காமர் ரோச்,போலார்டுட் ஆகியோர் ஏலத்தில் புறக்கணிக்கப்பட்டனர்.

**மோர்டாஷாவுக்கு லாபம்**

ஏலத்தில் அதிக இலாபம் அடைந்த வீரர் 25 வயது பங்களாதேஷ் வீரர் மோர்டாஷா தான். இவருக்கு ஆரம்பத் தொகையாக ரூபாய் 25 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இவரை ஏலத்தில் எடுக்க கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி உரிமையாளர் பிரீத்தி ஜிந்தாவுக்கும், கொல்கத்தா நைட்ரைடர்சின் ஜுகி சால்லாவுக்கும் கடுமையான போட்டி காணப்பட்டது. இறுதியில் ரூபாய் 3 கோடிக்கு கொல்கத்தா அணி இவரை ஏலத்தில் எடுத்தது.

**மல்லையா மகிழ்ச்சி**

பீற்றர்சனை ரூபாய் 7.35 கோடிக்கு வாங்கிய பெங்களூர் றோயல்சலஞ்சர்ஸ் உரிமையாளர் விஜய் மல்லையா கூறுகையில்; பீற்றர்சனை வாங்கியதில் மிகுந்த மகிழ்ச்சி. அவருக்காக சுமார் ரூபாய் 10 கோடி விலை கொடுக்கவும் தயாராக இருந்தேன். இவரது வருகையால் எங்களது அணியின் துடுப்பாட்டம் பலம் பெற்றுள்ளது என்றார்.

**பாகிஸ்தான் வீரர்கள் விலகல்**

பாகிஸ்தான் வீரர்களுக்கு அந்நாடு அனுமதி வழங்கவில்லை. இது குறித்து ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி கூறுகையில்; ஐ.பி.எல். தொடரில் பங்கேற்காமல், திடீரென பாகிஸ்தான் வீரர்கள் விலகி இருக்கிறார்கள். இதன் மூலம் விதிமுறைகளை மீறிவிட்டனர். இதனால் அவர்களது ஒப்பந்தம் இயல்பாகவே ரத்து ஆகியுள்ளது என்றார். பாகிஸ்தானின் யூனிஸ் கான்,சோயிப் மலிக்,சோயிப் அக்தர்,அப்ரிடி சல்மான் பட் உள்ளிட்ட 6 வீரர்களின் ஒப்பந்தம் இதனால் இரத்தாகி இருக்கிறது.

(5)

# சொந்த மண்ணில் இலங்கை ஆறுதல் வெற்றி பெறுமா?

## கடைசி போட்டி இன்று

(கொழும்பு)

இலங்கை-இந்திய அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி இன்று கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் பகல் ஆட்டமாக நடைபெறுகிறது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தோனி தலைமையிலான இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் ஒரு இருபது-20 போட்டியில் விளையாடுகிறது.

இதில் நடந்து முடிந்த நான்கு ஒருநாள் போட்டிகளின் முடிவில் இந்திய அணி 4:0 என தொடரை வென்று முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இவ்விரு அணிகளும் இன்று கொழும்பில் ஐந்தாவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டியில் விளையாடுகின்றது.

இந்திய அணி தொடரை 5:0 என கைப்பற்ற தயாராக உள்ளது. சொந்த மண்ணில் ஆறுதல் வெற்றிபெற இலங்கை அணி முழு வீச்சில் போராடும் என்பதால் போட்டியின் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்...



சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையை இலங்கை அணியின் 'சுழல் மன்னன்' முத்தையா முரளிதரன் படைத்தார்.

முன்னதாக சர்வதேச ஒருநாள் போட்டி களில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் 502 விக் கெட்டுக்களை வீழ்த்தி இந்த சாதனைக்கு சொந்தக்காரராக இருந்தார்.

இதனை கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டு அரங்கில் கடந்த 5ஆம் திகதி இந்திய அணிக்கு எதிராக நடைபெற்ற 4-வது ஒரு நாள் போட்டியில் தனது 328 சர்வதேச ஒரு நாள் போட்டியில் விளையாடிய முரளிதரன், கௌதம் காம்பீரை ஆட்டமிழப்பு செய்ததன் மூலம் 503 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தார்.

36 வயதுடைய முரளிதரன் டெஸ்ட் கிரிக் கெட் அரங்கிலும் 125 போட்டிகளில் விளையாடி 769 விக்கெட்டுக்களை கைப்பெற்றி சாதனை நாயகனாகத் திகழ்கிறார்.

தனது இந்த சாதனை குறித்து முரளி தரன் கருத்து தெரிவிக்கையில்; தனது வெற்றி தோல்விகளின் போது பக்கத்துணையாக நின்ற குடும்பத்தினருக்கு இந்தச் சாதனை யை அர்ப்பணிப்பதாக அவர் தெரிவித்தார்.


அத்துடன் 2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண தொடர்வரை தான் சர்வதேசகிரிக்கெட்டில் இலங்கை அணிக்காக சிறந்த கிரிக்கெட் வீரராக விளையாடவுள்ள தாகவும் குறிப்பிட்ட முரளிதரன் அதன் பின்னர் ஓய்வு பெறுவதாகவும் கூறினார்.

இதேவேளை முத்தையா முரளிதரன் போன்ற உன்னத கிரிக்கெட் வீரர் ஒருவர் தனது சாதனையை முறியடித்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் குறிப்பிட்டார். கிரிக்கெட் வரலாற்றில் மிகச்சிறந்த பந்து வீச் சாளர்களில் முரளிதரனும் ஒருவர் என வசிம் அக்ரம் புகழாரம் சூட்டியுள்ளார்.

டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகள் ஆகிய இரண்டு கிரிக்கெட் அரங்கிலும் அதிகூடிய விக்கெட்டுக்களை (1272) வீழ்த்திய வீரர் என்ற சாதனையை முரளி பெற்றுள்ளார்.

*(பயணிக்கும்)*

# எண் விளையாட்டு-06




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத்தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வரவேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத்தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

*நேற்றைய பகுதிக்கான விடை*



# பாப்பரசரின் பிரதிநிதி நேற்று யாழ்.வருகை

பாப்பரசரின் இலங்கைக்கான தூதுவர் மேதகு மரிய செனாரி ஆண்டகை யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்துள்ளார்.

யாழ். ஆயர் இல்லத்தில் தங்கியிருக்கும் இவர், யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மற்றும் மாவட்ட குருக்கள், துறவிகளைச் சந்தித்து உரையாடினார்.

திருத்தூதரின் யாழ். வருகையின் நோக்கம் பற்றி யாழ். ஆயரின் செயலர் அருட் திரு. றொஷான் அடிகளாரிடம் கேட்டபோது.

வன்னியில் துன்பமடையும் மக்கள் தொடர்பில் குருக்கள், துறவிகளின் நிலையறிந்து தனது ஒருமைப்பாட்டை காட்டும் நோக்குடன் அவர் வருகை தந்ததாக அடிகளார் குறிப்பிட்டார்.

திருத்தூதுவர் இன்று காலை 7.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் வன்னி மக்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்காக விஷேட திருப்பலியை யாழ். ஆயருடன் இணைந்து ஒப்புக் கொடுக்கவுள்ளதாகவும்,

தொடர்ந்து வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து புனர்வாழ்வு நிலையங்களில் வாழும் மக்களை சந்திக்கவுள்ளதாகவும் ஆயரின் செயலர் தெரிவித்தார்.

இதேவேளை திருத்தூதர் மரியசெனாரி ஆண்டகை கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோருடன் மோதல்களில் சிக்கியிருக்கும் மக்களின் நிலை பற்றி பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## புலிகளின் இரண்டு...

பிடித்ததாக பிரிகேடியர் உதய நாணயக்கார கூறினார். இந்த தொழிற்சாலையை புலிகளின் சீருடைத் தயாரிப்புக்காக பயன்படுத்திய தாக அவர் குறிப்பிட்டார். இத்தொழிற்சாலையில் இயந்திரங்களை புலிகள் ஏற்கனவே அங்கிருந்து அகற்றிக் கொண்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இராணுவத்தின் 57ஆம் படையணியினர் இந்த முகாமை கைப்பற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை முல்லைத் தீவுப் பகுதியிலுள்ள புலிகளின் மற்றுமொரு முகாமை படையினர் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்த இராணுவ பேச்சாளர் உதயநாணயக்கார முகாமிலிருந்து குளிரூட்டப்பட்ட பஸ் வண்டி, ஹப் வண்டி உட்பட ஒரு தொகுதி எரி பொருளையும் படையினர் கைப்பற்றியதாக தெரிவித்தார். (ந-5)

## ஈழத் தமிழர் அவலம் கண்டு...

தனது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் நேற்று அதிகாலை 2.30 மணியளவில், தன் வீட்டிற்கு அருகில் உள்ள அங்காள பரமேஸ்வரி காளியம்மன் கோயில் எதிரே ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான கோஷங்களை முழக்கமிட்டபடி உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்தார்.

உடல் முழுவதும் தீ பரவியதால் ரவிச்சந்திரனின் உரத்த குரலை கேட்டு ஓடி வந்த அயலவர்கள் அவரைக் காப்பாற்ற முயற்சித்தனர். ஆனாலும் அதற்குள் ரவிச்சந்திரனின் உடல் 90 சதவீதம் தீக்காயங்களுடன் கருகி விட்டது.

தீக்குளித்த ரவிச்சந்திரன் உயிரைக் காப்பாற்ற மயிலாடுதுறை அரசு மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். அங்கு ரவிச்சந்திரன் சிகிச்சை பலனின்றி மரணமானார்.

உயிருக்குப் போராடிய நிலையில் மயிலாடுதுறை மாஜிஸ்திரேட்டிடம் வாக்குமூலம் கொடுத்த ரவிச்சந்திரன் ஈழத்தமிழர்களின் அவலங்களை பார்த்து நெஞ்சு பதைத்தேன். இத்தனை அவலத்திற்கு உள்ளாகியிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு உதவ என் கட்சியினர் (காங்கிரஸ்) முன்வரவில்லையே என எனக்கு ஆதங்கமாக இருந்தது.

இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும். அங்கே அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இந்தியா நினைத்தால் இலங்கைத் தமிழர் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முடியும்.

ஆனால் அதற்கான முயற்சியில் இந்தியா இறங்காதது எனக்கு மிகவும் வேதனை அளிக்கிறது. ஈழத்தமிழர்களுக்காக என் உயிரைக் காணிக்கையாக்குகிறேன் என்று தெரிவித்தார்.

மரணமான ரவிச்சந்திரனுக்கு இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினரும், தமிழின உணர்வாளர்களும் அஞ்சலி செலுத்தியதுடன், ஈழத்தமிழருக்கான ஆதரவான முழக்கங்களை கோஷமிட்டனர்.

**கறுப்புக் கொடி ஏந்தியவாறு பேரணி**

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் தமிழர்கள் மீதான தாக்குதலை கண்டித்தும் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னை மன்றோ சிலையில் இருந்து சேப்பாக்கம் வரை கறுப்புக்கொடி பேரணி நேற்று நடைபெற்றது.

இந்த பேரணியில் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் இல.கணேசன், இலங்கைத்தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் என்று ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதேவேளை இலங்கையில் போரை நிறுத்தக் கோரி இலங்கை தமிழர் நல உரிமை பேரவை சார்பில் சென்னையில் நேற்று மாலை பேரணி நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் நடைபெற்ற இப் பேரணியில் தி.மு.க., காங்கிரஸ் உட்பட பல்வேறு கட்சிகள் பங்கேற்றன. அமைச்சர் அன்பழகன், அமைச்சர் கே.பி.பி.சாமி, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு, மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் பேரணியில் பங்கேற்று உரையாற்றினர். (ந-5)

## வன்னியில் உச்சமடையும்...

விஜயரட்ன கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

அங்கு 300 நோயாளர்கள் உள்ளனர். சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் வரையறுக்கப்பட்ட வளத்தைக் கொண்டு நோயாளர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி வருகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் 12 பணியாளர்கள் அங்கு உள்ளனர். ஆனால் அப்பகுதியில் குடிநீர் வசதி குறைவாகவே உள்ளது.

பாதுகாப்பு வலயம் மற்றும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் விடுவிக்கப்படாத பகுதிக்குமிடையிலான மனிதநேய உதவிகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் தொடர்வதால் நிலப்பரப்பு நாளுக்குநாள் குறைந்து வருகிறது. மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி இடம்பெயர்ந்து வருகின்றனர் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இரண்டு தரப்பினருடனும் தொடர்புகளைப் பேணி வருவதுடன் காயமடைந்தவர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மக்களின் பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## வன்னியில்...

எமிலியா கசெல்லா கூறினார்.

வன்னியிலுள்ள 2இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கும் எவ்வாறு உணவு நிவார ணம் வழங்குவது என்பது பற்றி ஆராய்ந்து வருகின்றோம் என அவர் தெரிவித்தார்.

மனிதநேய அமைப்புக்கள் உணவுப் பொருட்களை வழங்குவதிலேயே அங்குள்ள மக்களின் வாழ்க்கை தங்கியுள்ளது என எமிலியா கசெல்லா குறிப்பிட்டார்.

எனினும் வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களும், மருந்துப் பொருள்களும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## புதுக்குடி...

யிருப்புக்கு சுமார் 5 கிலோமீற்றர் வடமேற்கு திசையில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் புலிகளின் பீரங்கி ஒன்று அழிக்கப்பட்டதாக வும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் 59-வது படைப்பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் குறிப்பிட்ட விமானப்படைப் பேச்சாளர் தாக்குதல்களுக்கு மிக் மற்றும் கிபிர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறினார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடற்புலித் தலைவர் சூசை மறைந்திருந்த பகுதி மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 17 புலிகள் கொல்லப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் விமானப் படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## அரச கட்டுப்பாடற்ற...

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் பொது மக்களின் வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தை வவுனியா மாவட்ட செயலக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதேவேளை அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வரும் பொதுமக்களுக்காக மனிப்பாம், நெடுக்குளம் நலன்புரி நிலையங்களுடன் மேலும் 4 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

பம்பைமடு, செட்டிக்குளம் மகாவித்தியாலயம், காமினி மகாவித்தியாலயம், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர் விடுதி என்பனவே ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ந-5)

## 'மிக்' விமானத் தாக்குதலில்...

பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை மீது நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வான்படை தாக்குதலை நடத்தியது.

இதில் அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களுடன் மருத்துவமனை முற்றாக அழிக்கப்பட்டு விட்டது.

இதில் 61 நோயாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நோயாளர்களில் பெருமளவிலானோர் தமது உறவினர்களின் தொடர்புகளை இழந்து அவர்களின் தொடர்பிற்காக காத்திருந்து சிகிச்சை பெற்று வந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

இத்தாக்குதலின்போது வீதியால் சென்று கொண்டிருந்த 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த மருத்துவமனை வளாகத்தின் மீது நடைபெற்ற வான் தாக்குதலின் தொடர்ச்சியாக படையினர் தொடர்ந்து எறிகணைத் தாக்குதலை நடத்திக் கொண்டிருப்பதால் மீட்புப் பணிகளை சரிவரச் செய்ய முடியாது இருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் இடம் பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் மீதும் மக்கள் குடியிருப்புக்கள் மீதும் நேற்று படையினர் 2 மணி நேரமாக நடத்திய எறிகணைத் தாக்குதலில் 21 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 52 பேர் காயமடைந்துள்ளனர்.

தேவிபுரம் - புதுக்குடியிருப்பு வீதியில் மக்கள் செறிவாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த போது நேற்று பிற்பகல் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 12 பேர் பலியானதுடன் 48 பேர் காயமடைந்துள்ளனர். இதே பகுதியில் மீண்டும் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் 32 பேர் காயமடைந்துள்ளதாகவும் அங்கு இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

## வன்னி மக்களைக் காப்பாற்ற...

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன், இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக ஐ.நா.வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை நிலைவரம் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாக ரைம்ஸ் ஒஃப் இந்தியாவுக்குத் தகவல் தெரிவித்துள்ள ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் மோதல்களுக்குள் சிக்கியுள்ள பொதுமக்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் சிறிய, அதேநேரம் அதிகளவு செறிவான பொதுமக்கள் நிறைந்துள்ள பகுதிக்குள் நடைபெற்றுவரும் மோதல்கள் காரணமாக ஏற்படக்கூடிய மனிதப் பேரவலத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு உலகம் உடனடியாகச் செயற்பட வேண்டும்.

மோசமான மனிதப் பேரவலத்தைத் தவிர்பதற்கு மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எந்தவித தாமதமும் இன்றி உடனடியாகச் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களை ஐ.நாவும் ஏனைய தரப்புகளும் வேண்டுகோள் விடுக்கின்றன என்றார் பான் கீ மூன்.

இலங்கை நிலைவரம் தொடர்பாக பிரணாப் முகர்ஜியுடன் விரிவாகக் கலந்துரையாடிய தாகக் குறிப்பிட்ட பான் கீ மூன் இந்த விடயத்தில் ஐ.நாவின் நிலைப்பாடு இந்திய நிலைப்பாட்டை ஒத்ததாகவே இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்தியாவும்,ஐ.நாவும் கூட்டாகப் பணியாற்றுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மோதல்களுக்குள் சிக்கியுள்ள பொதுமக்களைக் காப்பாற்ற உடனடியாகப் போர் நிறுத்தம் ஒன்று செய்துகொள்ளப்பட வேண்டும் என்று பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், தென்னாபிரிக்கா, கனடா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளன.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு அரசியல் ரீதியாகப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்க வேண்டுமென அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த நிலைப்பாட்டைத் தாமும் ஏற்றுக் கொள்வதாக நோர்வே அமைச்சரும்,சமாதான முயற்சிகளில் முன்னின்று உழைத்தவருமான எரிக் சொல்ஹேய்மும் தெரிவித்துள்ளார். (ந-5)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சண்முகராசா இலங்கைநாதன்

(உரிமையாளர் அன்னராசா ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்)

தோற்றம் 20 06 1945



உதிர்வு 06 02 2009

வேலணை மேற்கில் விழுமிய
குடியில் வந்துதித்த எங்கள்
வளமார் இலங்கைநாதன்
பண்புடன் வாழ்ந்து பக்தியில் தோய்ந்து
சிற்பனை முருகன் சீரடி பணிந்து
நற்பல தொண்டுகள் நயமாய்ச் செய்து
நோய்வாய்ப்பட்டு நீத்தனன் இன்னுயிர்
அன்னவர் ஆன்மா அருள்மிகு
சிற்பனை முருகனின் பொற்பதம்
அடைந்து சாந்தி எய்துக.

வேலணை மேற்கு,
வேலணை -6.

-சிற்பனை முருகன்
பரிபாலனசபையினர்

(C-2113)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.